Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM ❋ மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 30 15-08-94 திங்கட்கிழமை ஓசை 178

பொதுசன நூலகம் மாநகராட்சி 16-8-1994 யாழ்ப்பாணம்

## நாளை பொதுத் தேர்தல்

சிறிலங்காவின் 10-வது பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் வாக்களிப்பு நாளை நடைபெறவுள்ளது. இத்தேர்தலில், ஒரு கோடியே மூன்று லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கும் தகுதி பெற்றுள்ளனர். 225 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் மொத்தம் 196 உறுப்பினர்கள் நேரடியாகவும், ஏனைய 29 பேர் கட்சிகளுக்கு கிடைக்கும் வாக்குகளின் அடிப்படையில் தேசிய பட்டியல் மூலம் தெரிவாகவுள்ளனர். இதே வேளை தொகுதி ரீதியான தேர்தல் முடிவுகள் 17 ஆம் திகதி அதிகாலை வெளிவரத் தொடங்கும் எனவும் காலை (6ஆம் பக்கம் பார்க்க)

# புதிய அரசாங்கம் பதவி ஏற்கும்வரை

# ராணுவ தலைமையை மாற்ற வேண்டாம்

## சிறிமாவோ ஜனாதிபதி டி.பிக்கு கடிதம்

[கொழும்பு]

பொதுத் தேர்தல் முடிவுற்று புதிய அமைச்சரவை பதவி ஏற்கும்வரை பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் மட்டத்திலோ, இராணுவத் தலைமைப் பீடத்திலோ எத்தகைய மாற்றத்தையும் செய்யவேண்டாம் என பொதுஜன ஐக்கிய முன்னணித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு நேற்று முன்தினம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ள அவர் அதில் மேலும் குறிப்பிடுகையில்; முற்றுமுழுதான சுதந்திரத் தேர்தலிலும் எந்தவித அச்சுறுத்தல் மற்றும் நிர்ப்பந்தம் இன்றியும் 16 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெற வேண்டும் என்பதே அதி முக்கியமானதாகும். அதிகார பீடத்திலும், இராணுவ தலைமைப் பீடத்திலும் அடுத்த ஒருசில நாட்களில் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மாற்றங்கள் பற்றி நம்பகரமான தகவல்கள் கிடைத்துள்ளன.

பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பாக இவ்வாறான மாற்றங்கள் செய்வது சுதந்திரமான, நியாயமான தேர்தல் நடை (6 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி பகுதிமோதலில் 8 போராளிகள் வீரச்சாவு

(பூநகரி)

பூநகரிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே கடந்த 11-ம் திகதி இடம் பெற்ற மோதலின் போது எட்டு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த:

- மேஜர் பீலிஸ்/அதிதரன் (வீரசிங்கம் செல்வராசா- இல. 596 கொக்காவில் வீதி, துணுக்காய் கிளிநொச்சி)
- மேஜர் நவம்/அல்பேட் (செல்லத்தம்பி கிருபராசா கூழாவடி முறிப்பு ஓட்டுத் தொழிற்சாலை அருகாமை முல்லைத்தீவு வீதி, ஒட்டிசுட்டான் சொந்த இடம் கொக்குத் தொடுவாய் மணலாறு)

(6 ஆம் பக்கம் பார்க்க)

பலாலி எறிகணைத் தாக்குதலில்

## மரணமடைந்தோர் தொகை எட்டாக அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவத்தினர் நேற்று முன்தினம் குடிமனைகளை நோக்கி நடத்திய கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதலில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் மேலும் ஒருவர் நேற்று மரணமானார்.

அச்சுவேலி பகுதியைச் சேர்ந்த ஆ. லோகேஸ்வரன் (வயது 62) என்பவரே மரணமானவர் ஆவார். இதன் மூலம் எறிகணைத் தாக்குதலில் மரணமானவர்களின் எண்ணிக்கை எட்டாக அதிகரித்துள்ளது. (88)

## ஐ. தே. க. பெருவெற்றிபெற்றால் இருவாரத்தில் புலிகளை ஒழிப்போம்

### ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா

(கொழும்பு)

பொதுத் தேர்தலின் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி 150க்கு

இவ்வாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கூறியுள்ளார்.

கேகாலை மாவட்டம் அக்

புலிகளின் பிடியிலிருந்த கிழக்கு மாகாணத்தை விடுவித்து அங்கு தேர்தலையும்

## பலாலி தளத்திற்கு புதிய கவசவாகனம்

(கொழும்பு)

பலாலி இராணுவ தளத்திற்கு திருகோணமலையிலிருந்து கப்பல் மூலம் ரஷ்யத் தயாரிப்பான சக்தி மிக்க புதிய கவசவாகனங்கள் அனுப்பி வைக்கப்பட இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் வவுனியா உட்பட பலபகுதிகளிலிருந்தும் மேலதிக துருப்புக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

கடந்த இரண்டாம் திகதியன்று பலாலி கூட்டுப்படை தளத்தினுள் புலிகள் ஊடுருவித் தாக்குதல் நடத்தியதை (6 ஆம் பக்கம் பார்க்க

## மேலும் தாக்குதல்களை புலிகள் நடத்தலாம்

### இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன

இராணுவக் கட்டுப் பாட்டுப் பிரதேசங்கள் எனக்கூறப்படும் பகுதிகளில் புலிகள் ஊடுருவித்தாக்குதல் நடத்துவதை அடுத்து, அப்பகுதிகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வருவதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன

தேர்தலைக் குழப்பும் நோக்கத்துடன் மேலும் தாக்குதல்கள் நடத்தப்படக் கூடும் எனவும் அவ்வட்டாரங்கள் கூறுகின்றன

## என்னைக்கொல்ல

டிருந்தவர்களில் மேலும் ஒரு ரித்துள்ளது. (88)

# அதிகாரிகள் அசிரத்தையால் நிரந்தர நியமனம் இல்லை

### கால்நடை உற்பத்தி சுகாதார ஊழியர் பாதிப்பு

யாழ்ப்பாணத்தில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் வடக்கு, கிழக்கு மாகாணசபையின்கீழ் அமைய ஊழியர்களாக கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக கடமையாற்றும் 25க்கு மேற்பட்ட ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா ஜனாதிபதியின் மேதினப் பிரகடனப்படி 180 நாட்களுக்குமேல் கடமையாற்றிய ஊழியர்கள் பலர் தமது திணைக்களங்கள் எடுத்தநடவடிக்கைகள் காரணமாகநிரந்தரமாக்கப்பட்டுள்ளனர். இத

(6 ஆம் பக்கம் பார்க்க

# பிரசாரக் கூட்டத்திற்கு அருகில் குண்டு வெடிப்பு

### வவுனியாவில் சம்பவம்

வவுனியாவில் கடந்த வியாழனன்று ஐ. தே. க. பிரசாரக் கூட்டம் நடந்த சமயம் சுமார் 400 யாருக்கு அப்பால் குண்டு ஒன்று வெடித்தது. எனினும் எவரும் பாதிக்கப்படவில்லை.

இக்கூட்டத்தில் அமைச்சர் இராஜ மனோகரி புலேந்திரனும் பிரசன்னமாயிருந்தார். பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்றே வெடித்ததாகக் கூறப்படுகிறது.

பொதுத் தேர்தலின் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி 150க்கு மேற்பட்ட பாராளுமன்ற ஆசனங்களை கைப்பற்றுமேயானால், இரு வார காலத்திற்குள் வடக்கில் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்படும்.

டி. பி. விஜேதுங்கா கூறியுள்ளார்.

கேகாலை மாவட்டம் அக்குறண தொகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில்,

புலிகளின் பிடியிலிருந்த கிழக்கு மாகாணத்தை விடுவித்து அங்கு தேர்தலையும் நடத்தியுள்ளோம். இப் பிரதேசத்திலுள்ள 85,000 வாக்காளர்களில் 65 சத விகிதமானோர் ஐ. தே. கவையே

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.கவின் ஜனாதிபதியின் கீழ் எமது ஆட்சி தவிர்க்க முடியாது

### சுதந்திரக்கட்சி செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் கீழ் தமது ஆட்சியை நடத்த வேண்டியது தவிர்க்க முடியாதது என சுதந்திரக்கட்சிப்பொதுச் செயலாளர் தர்மசிறி சேனாநாயக்கா தெரிவித்துள்ளார்.

அரசியல் அமைப்பு சட்டவிதிகளின் படி ஜனாதிபதி தெரிவிக்கும் சட்டநடைமுறை சரியானதே ஆனால் மக்கள் தேர்தல் முடிவுக்கு முன்னால் ஜனாதிபதி தனது அதிகாரத்தை செலுத்த முடியாத ஓர் நிலை தோன்றும் எனவே நாட்டின் சட்டமும் ஒழுங்கும் நிலைபெற வேண்டும் என விரும்பும் ஜனாதிபதி இதனை தவிர்த்து பிரதமரின் நம்பிக்கைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

இதனை அவர் செய்ய தவறின் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் இப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# என்னைக்கொல்ல மீண்டும் சதித்திட்டம்

### சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

தன்னைக் கொலை செய்ய மீண்டும் ஒரு சதித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்துள்ளார் இது குறித்து தான் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கும், ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தெரிவித்துள்ளதாக அவர் மேலும் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், தேர்தலுக்கு முன்னர் தன்னைக் கொலை செய்ய தனிப்பட்டகுழுக்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஆங்கில வார இதழ்கள் கணிப்பில் ஐ.தே.க. வெற்றி

(கொழும்பு)

பிரபல ஆங்கில பத்திரிகைகள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியே மீண்டும்ஆட்சி அமைக்கும் என தெரிவித்துள்ளன.

இதே வேளை ''அத்த'', ''ராவய'', ''லக்திவ'' ஆகிய பத்திரிகைகள் பொது ஜன ஐக்கிய முன்னணியே ஆட்சியை அமைக்கும் என தெரிவித்துள்ளன.

''ஐலண்ட்'' வாரப் பத்தி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மலையக மக்கள் முன்னணி குமாருக்கு ஆதரவு

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் குமார் பொன்னம்பலம் தலைமையில் போட்டியிடும் சுயேட்சைக் குழுவினரை ஆதரிக்கும் படி மலையக மக்கள் முன்னணி தமிழ் மக்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக முன்னணியின் தலைவரான பெ. சந்திரசேகரன் விடுத்துள்ள ஒரு

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ராணுவ பழிவாங்கலுக்கு அஞ்சி மட்டக்களப்பில் மக்கள் வெளியேற்றம்

### இருவர் பலி; காடுகள் நோக்கி எறிகணை வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் கதிரவெளிப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த சிறிலங்கா இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் அண்மையில் நடத்திய தாக்குதலையடுத்து சிறிலங்கா இராணுவத்தினர் பழிவாங்கும் தாக்குதல்களில் ஈடுபடலாம் என்ற அச்சத்தால் இப்பகுதியிலுள்ள தமிழ்க் குடும்பங்கள் பல இடம் பெயர்ந்துள்ளன. ஐம்பதுக்கும் அதிகமான குடும்பங்கள் இவ்வாறு இடம்பெயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கதிரவெளி, அம்பந்தனாவெளி, வாகரை ஆகிய பகுதிகளிலுள்ள படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். கட்டுமுறிவு முகாம் கடுமையான தாக்குதலுக்கு இலக்


(6 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னார் தீவில் படையினர் எறிகணைத் தாக்குதல்

மன்னார்த் தீவில் கடந்த 11-ம் திகதி பொலிஸ் நிலையம் மீது புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்து மன்னார் தீவுப்பகுதியில் பல இடங்கள் மீதும்எறிகணை த்தாக்குதல்நடாத்தப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன

இதனையடுத்து அங்கு பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாகவும்தேர்தல் நடவடிக்கைபெரும்பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# வீரச்சாவு



கப்டன் திருமாறன் (சிறி)

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த 10ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர் மோதலின் போது விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த கப்டன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ வேட்டுக்கு சிறுவன் பலி

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவ சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் பாடசாலை மாணவன் ஒருவர் பலியான சம்பவம் வாழைச்சேனைக்கு அருகேயுள்ள புன்னையடிக் கிராமத்தில் இடம்பெற்றது

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கு இணைப்பு; சொக்ஸி - பீரிஸ் இழுபறி

(கொழும்பு)

இதுவரை காலமும் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறையை கண்டித்த பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இப்போது ஜனாதிபதிக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட வேண்டும் எனக் கூறுவது ஆச்சரியம் தருகிறது என அரசியல் யாப்பு விவகார அமைச்சர் கே. என். சொக்ஸி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியினால் வடக்கு -கிழக்கு மாகாண இணைப்பை பிரிக்க முடியாது என்றும், இதற்கு சர்வசன வாக்கெடுப்பே சரியான வழி என்றும் நான்கூறியதற்கு, இணைப்பைத் துண்டிக்கும் வல்லமை ஜனாதிபதிக்கு இருப்பதாகவும் பாராளுமன்றத்தின் பெரும்பான்மை மூலம் இணைப்பை ரத்துச்செய்யலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து தீர்மானிக்கும் மக்கள் உரிமையைப் பறித்து பாராளுமன்ற பெரும்பான்மையினால் இந்த மாகாணப் பிரிவினையைப்பற்றி முடிவெ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஹைறக்கோ, கற்பூரம் மாஜா, வாள்பிளேற், சீபாக்காய், பாக்கு, சீனி விற்னைக்குண்டு. சி. எம். சுகந்தினி 309, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம். (908 7)

### துளிர்

தமிழ் நாடு, புதுவையில் பள்ளி மாணவரிடையே பெரும் வரவேற்பைப் பெற்று பல இலட்சம் பிரதிகள் விற்பனையாகும் சிறுவர்க்கான அறிவியல் மாத இதழ் இப்பொழுது யூன், யூலை இதழ்கள் எங்கும் விற்பனையாகிறது. (9097)

### சாரதா

கோமல் சுவாமிநாதன் பேட்டியுடனும் இலங்கை எழுத்தாளர்களின் ஆக்கங்களுடனும் இலங்கைச் சிறப்பிதழாக இப்பொழுது விற்பனையாகிறது. (9098)

### ந. சுந்தரப்பிள்ளையின் அங்கரைச் சீமையில்'

இங்கிலாந்திற்குச் செல்லாமலேயே அந்த நாட்டையும் இலண்டன் மாநகரத்தையும் கண்முன் காட்சிப்படுத்த முனைந்துள்ளார் அதில் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளார்:- ஈழநாதம் வெள்ளி மஞ்சரியில் வவுனியா திலீபன் (8898)

### வைத்திய கருத்தரங்கு

யாழ் மருத்துவ சங்கத்தினால் மாதந் தோறும் நடத்தப்படும் முழுநிலா மருத்துவ கருத்தரங்கு எதிர்வரும் புதன் மாலை 6 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலை தாதிகள் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கர்ப்பிணி தாயினதும் குழந்தையினதும் நலத்தை எப்படிப் பேணல் என்ற தலைப்பிலான இக்கருத்தரங்கு டாக்டர் எஸ்.பி ஆர். சீர்மாறன் தலைமையில் நடைபெறும். டாக்டர்கள் என். சிவராஜா, எம். குணரட்ணம், கே. பாலசிங்கம், திருமதி எம். கருணா

## கண்காணிப்பு குழுவினர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

பொதுத்தேர்தலை கண்காணிக்க வந்துள்ள சர்வதேச அவதானிகள் குழு நேற்று ஜனாதிபதி டி-பி-விஜேதுங்காவை சந்தித்தனர். 12 நாடுகளைச் சேர்ந்த44உறுப்பினர் குழுவிற்கு அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் டக்லஸ் மக்லன் தலைமை வகிக்கிறார்-

தேர்தல் சுதந்திரமாக நடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி, குழுவினரிடம் கூறினார்- இக்குழுவினர் பாரபட்சமற்ற முறையில் தேர்தலைக் கண்காணிக்கும்என குழுவின் தலைவர் ஜனாதிபதியிடம் கூறினார்.

## 5-ம் ஆண்டு நினைவாக..,



பிறப்பு : 5 - 05 - 1968

வீரச்சாவு : 11 - 08 - 1989

### லெப். ரகுபதி

ஆ. சாம்சன் மத்தியூஸ் செல்வராசா

(செல்வன்)

பிரதான வீதி, மாதகல்.

தலைவர் பிரபாவின் புலிகள் படையில்
தாயகம் மீட்கும் உன்னத பணியினை
விருப்புடன் ஏற்று கடற்புலியாகி நின்ற
மாவீரனே - ரகுபதியே
உன் ஆன்மா சாந்தியடைய அஞ்சலி செய்கிறோம்.

மாதகல். (91υ2) -நண்பன்

### இந்த விளம்பரத்தைப் பார்க்காதீர்கள்! ஆனால் வாசியுங்கள்!!!

ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா, நல்லூர் திருவிழாவை முன்னிட்டு விரதசுத்த போசன உணவுப் பார்சல்களை காலை 11. 30மணி முதல் பிற்பகல் 3-30 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். தாமதமோ! தடையோ இல்லை.

ரூபா 25 / மட்டுமே

ஜோ. எகட்டனின்

### ஜெசித்தாரா உள்ளூர் விருந்தகம்

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
கொழும்புத்துறைச் சாலை, சுண்டுக்குளி.
வழமையான உணவுப் பார்சல்களும்
கிடைக்கும்.

ரூபா 30/-

புதுயுகத்தில் புது உருவம்

ஜெசித்தாரா

(சி-10094)

### அறிந்ததைச் சொல்லுங்கள்!

## வியாழன் முடிவு வெளியாகிவிடும்

(கொழும்பு)

செவ்வாயன்று நடைபெறும் பொதுத்தேர்தல் முடிவுகள் முழுமையாக வியாழன் பிற்பகலில் வெளியாகிவிடும் என தேர்தல் ஆணையாளர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்

## லொறிச் சாரதி சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியாவில் லொறிச் சாரதி ஒருவரின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்டது.

இராசையா இராசேந்திரம் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்

## பேராதனைப் பல்கலைக்கழக (வெளிவாரி) விரிவுரைகள்

### ★ கலைமாணி B. A.

மேற்படி பாடநெறிக்கான விரிவுரைகள் 20 - 8 - 94-ல் ஆரம்பமாகின்றன.

### ★ கலை முதற்தேர்வு (G.A.Q.) டிசம்பர் 94

மேற்படி பாடநெறிக்கான மீட்டல் விரிவுரைகள் 20 - 8 - 94-ல் ஆரம்பமாகின்றன. கடந்த 10 வருடகால வினாப்பத்திரங்களுக்கு விடைகள் வழங்கப்படும்.

விபரங்களுக்கு:

பட்டப்படிப்புகள் கல்லூரி
148 / 1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-10115)

பொதி சுமக்கும் வாகன சேவைச் சங்கம்
கிளாலி

## பதவி வெற்றிடம்

### வாகன பரிபாலகர் (தற்காலிகம்)

மேற்காண் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. வயதெல்லை: 20-40 வயதுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.
2. தகைமைகள்: க. பொ. த. சாதாரண பரீட்சையில் சித்தியும் கணித பாடத்தில் விசேட சித்தியெய்தி இருத்தல் வேண்டும்,
3. தேகாரோக்கியம் உடையவராயும் நல்

## நினைவு கூருகின்றோம்...

### 15-08-1994...

1986-ம் ஆண்டு இதேதினத்தில் திருமலை-சாம்பல் தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் விழுப்புண்ணடைந்த போராளியை வாகனத்தில் ஏற்றிவரும்போது நிலாவெளிப் பகுதியில் தவறி வீழ்ந்ததில் எமைப் பிரிந்த,

**சீலன்** (இலட்சுமணப் பெருமாள் இலட்சுமண சீலன் - உவர்மலை - திருமலை)

1988-ம் ஆண்டு இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**ச. இரங்கநாதன் (மாஸ்ரர்)** (-இருபாலை-யாழ்)

1989-ம் ஆண்டு மட்டு - பாவற்குடிச்சேனைப் பகுதியில் சமூகவிரோதசக்திகளின் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**மகாராஜன்** (வெ. தட்சணாமூர்த்தி - மட்டு)

திருமலை - பன்குளம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**பவான்** (நடராசா சரவணபவான்- சாம்பல்தீவு-திருமலை)

1990-ம் ஆண்டு கடலில் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**நித்தி** ( - - - மட்டுநகர்)

**குமணன்** (வல்லிபுரம் ஜெயவீரசிங்கம்-கற்கோவளப் - பருத்தித்துறை)

**இந்திரஜித்** (சரவணமுத்து நாகேஸ்வரராசா - வல்வெட்டித்துறை)

அம்பாறை - அக்கரைப்பற்று. 5-ம் கட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**வாசு** (கந்தையாப்பிள்ளை உதயகுமார்-திருக்கோயில்-அம்பாறை)

**மேஜர் சிந்து** (சித்திரவேல் தேசிகன்-கிரான்-மட்டு)

திருமலை-தம்பலகமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**அமலன்-கமலன்** (நடராசா கிருஷ்ணமூர்த்தி -வில்பற்றுக்குறோஸ்-திருமலை)

1992-ம் ஆண்டு வவுனியா-கட்டையர்குளம் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

**திருமாறன்-கங்கா** (வைத்திலிங்கம் விஜயகுமார்-பெரியபோரதீவு-மட்டு)

இதேதினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும், சிறிலங்கா படையினராலும், தேசவிரோதசக்திகளாலும் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமக்கள்,

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

தலைமையில் நடைபெறும் டாக்டர்கள் என். சிவராஜா, எம். குணரட்ணம், கே. பாலசிங்கம், திருமதி எம். கருணாசரன் ஆகியோர் கருத்துரைகள் வழங்குவர்.

## கோழிகளுக்கு தடுப்பூசி

தமிழீழத்தில் கால்நடை வளர்ப்பை மேம்படுத்தும் வகையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல வழிகளில் செயற்பட்டு வருகின்றது. அந்த வகையில் தென்மராட்சிப்பகுதியில் கடந்த யூலை மாதம் 2000ற்கு மேற்பட்ட கோழிகளுக்கு கொள்ளை நோய்க்கு எதிராக தடுப்பூசி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன தென்மராட்சிக் கோட்ட விலங்கு வேளாண்மை பகுதியினர் கால்நடை சுகாதார வைத்தியர்களின் அனுசரணையுடன் போடப்பட்டது.

## விசேட பொதுக்கூட்டம்

(வேலணை)

வலிகாமம் வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சனசமூக நிலையங்களின் சமாசத்தின் விசேட பொதுக் கூட்டமொன்று எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்குவலிகாமம் வடக்கு பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசத்தின் தலைவர் திரு. நா. போஜன் தலைமையில் நடைபெறவிருக்கின்றது. இவ் விசேட பொதுக் கூட்டத்தில் அரசாங்கத்தால் இதுவரை கொடுக்கப்பட்டு வந்த சனசமூக நிலையங்களின் நன்கொடைகள் நிறுத்தப்பட்டுள்ளன எனவே இவை பற்றி கலந்தாலோசித்து அவற்றை மீளப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகள் எடுப்பதுபற்றி ஆராய்தல், சனசவிய வேலைத் திட்டங்கள் பற்றி ஆராய்தல் என்பன இடம்பெறவுள்ளன. (14)

---

**அறிந்ததைச் சொல்லுங்கள்!**
**பதக்கத்தை வெல்லுங்கள்!**

## தமிழீழத் தாயகத்தை தெரிந்து வையுங்கள்.

உங்கள் அறிவு மேம்படுத்தலுக்கு

"தமிழீழத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்"
வினாவிடைப் போட்டி

**ஒரு பவுண் தங்கப் பதக்கம் பரிசு**

**அன்பு மாணவர்களே!**

**உங்கள் அறிவினை வளமாக்கி**
**உங்கள் திறமையை வெளிக்காட்டுங்கள்**

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானப் பகுதியினரால் நல்லூர்க் கண்காட்சியை முன்னிட்டு நடாத்தப்படவிருக்கும் வினாவிடைப் போட்டியில் கலந்து கொண்டு முழுநிறைவான தங்கப்பதக்கத்தையும் பெறுமதி மிக்க பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

**விண்ணப்ப முடிவுத் திகதி:- 15-08-1994**

**விபரங்கள் கடந்த 07, 08, 09-ம் திகதி பத்திரிகைகளில்**

**உட்கட்டுமானப் பகுதி,**
**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,**
**தமிழீழ விடுதலைப் புலிகள்,**
**தமிழீழம்.**

(சி-10099)

---

3. தேகாரோக்கியம் உடையவராயும் நல் நடத்தையுடையோராயும் இருத்தல் வேண்டும்.

4. சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்

5. விண்ணப்ப முடிவுத் திகதி 25-8-94

விண்ணப்பங்கள் யாவும் சொந்தமாகத் தயாரிக்கப்பட்டு தலைவர், பொதி சுமக்கும் வாகன சேவைச் சங்கம், இளாலிப் பணிமனையில் நேரில் ஒப்படைக்கப்படவேண்டும். விண்ணப்பத்துடன் தகைமைச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ் அத்துடன் அண்மையில் பெறப்பட்ட நற்சான்றிதழ் இரண்டு (2) இணைக்கப்படவேண்டும். முடிவுத் திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இ. அருமைந்துரை
தலைவர்

(9101)

---

## 31-ம்நாள் நினைவஞ்சலி

அமரர்

**சுப்பிரமணியம் சிவவாகீசர் B.A**

(ஓய்வுபெற்ற அதிபர், தொல்புரம்)

வட்டுக்கோட்டை அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச்சங்கத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரும், உப தலைவராக இருந்து நற்சேவையாற்றி சங்கத்தின் மேன்மைக்காக உழைத்தவரும் கல்வி சமூக சமயப்பணிகளில் ஈடுபட்டு மௌனத் தொண்டாற்றியவருமான அருங்கனவான் சு. சிவவாகீசர் ஐயா அவர்கள் அமரரான 31-ம் நாளாகிய இன்று அப்பெரியாரையும் அவர் ஆற்றியதன்னலமற்ற தொண்டுகளையும் நினைவு கூர்ந்து அஞ்சலித்து நிற்கின்றோம்.
அவருடைய ஆன்மா சாந்தி அடைவதாக

வட்டுக்கோட்டை.
15 - 08 - 1994.

இயக்குனர் சபையினரும்
ஊழியர்களும்.

(சி-10112)

---

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10113)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
19 - 07 - 1982

உதிர்வு
06 - 08 - 1992

செல்வி

**தம்பிராசா சர்விழி (கிளி)**

(ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை மாணவி)

**எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே!**

எங்கள் செல்லக்கிளியே எம்மைவிட்டு பிரிந்து இரண்டு ஆண்டு காலம் சென்றாலும் உங்கள் திருமுகம் எம்மை விட்டு நீங்காது சர்விழியே! இறைவனடி சேர்ந்த உங்கள் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கோட்டைக்காடு,
மல்லாகம்.

அப்பா, அம்மா,
அக்காமார், அண்ணாமார்.

(9100)

## வன்செயல்களைத் தடுக்க இராணுவத்தினர் உதவுவர்

### பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தலின் பின்னான வன்செயல்களைத் தடுப்பதில் பொலிசாருக்கு இராணுவத்தினரும் சகல வகையிலும ஒத்துழைப்பு வழங்குவர் என பொலிஸ் மா அதிபர் பிராங் டீ சில்வா தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சிப் பேட்டியொன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தேர்தல் கால வன்செயல்கள், முன்னர் வேறு அரசாங்கங்களில் நடைபெற்றிருக்கலாம். ஆனால் இப்போதைய அரசு, வன்செயல்களைத் தடுப்பதில் முழுக் கவனம் செலுத்தும் எனவும் அவர் தெரிவித்தார்.

## தேர்தல் மோசடி புரிய காமினி பணிப்பில் பயிற்சி

(கொழும்பு)

கண்டிமாவட்டத்தில், தேர்தல் மோசடிகளில் ஈடுபடவென, ஐம்பது பேருக்கு, காமினி திசாநாயக்காவின் பணிப்பின் பேரில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாக, பொதுஜன ஐக்கிய முன்னணி பிரமுகர் கேணல் அனுருத்த ரத்வத்த குற்றஞ்சாட்டியுள்ளார்.

89ஆம் ஆண்டளவில் கிரிமினல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட பலர், இப்போது கண்டிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பொ. ஐ. மு. வேட்பாளர் வாள்வெட்டினால் காயம்

பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தல் வேட்பாளர் ஒருவர் அண்மையில் தாக்கப்பட்டுள்ளதாக பொதுஜனஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கேகாலை மாவட்டத்தைசேர்ந்த பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் மகிந்த பாலஹேரத் என்பவர் வாளினால் தலையில் வெட்டப்பட்டு படுகாயம் அடைந்துள்ளார் என மேலும் தெரிய வருகின்றது.

## தேர்தலில் அமைதி பேண கட்சிகள் கூட்டுக் கோரிக்கை

(கொழும்பு)

பொதுத் தேர்தல் அமைதியாக நடத்தப்படுவதற்கு தேர்தலில் போட்டியிடும் சகல அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் வேட்பாளர்களும் முழுமையாக ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் வலியுறுத்தப்பட்டுள்ளது

ஐக்கிய தேசியக் கட்சி, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் கொழும்பில் போட்டியிடும் சுயேட்சைக் குழுக்கள் என்பன உட்பட பல்வேறு அரசியல் தலைவர்களும் இம் மாநாட்டில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டனர்.

பாதுகாப்பு அமைச்சில் வரிசையாக நடத்தப்பட்ட பல சந்திப்புக்களின் பின்னர் அரசியல் கட்சித் தலைவர்களாலும். சுயேட்சைக் குழுப் பிரதிநிதிகளாலும் ஒப்பமிடப்பட்டு கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

## பென்சன் வவுச்சர்கள் கொழும்பில் தேக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த மாகாண மற்றும் புகையிரதப் பகுதி ஊழியர்களுக்கான பென்சன் வவுச்சர்கள் கொழும்பில் தேங்கிக் கிடப்பதாக அறிய வருகிறது

இவற்றை யாழ். எடுத்துவர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காட்டிய அசிரத்தையே இத் தேக்க நிலைக்குக் காரணம் என தெரிவிக்கப்படுகி...

இதேவேளை மத்திய அரசினால் விநியோகிக்கப்படும் பென்சன் வவுச்சர்கள் யாழ் செயலகம் வந்து சேர்ந்துள்ளன.

இவற்றைத் தரம் பிரிக்கும் வேலைகள் தற்போது நடைபெற்றுவருவதாகவும்இன்னும் சில தினங்களில் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகி...

# மூன்றுவருட காலத்தில் தென்பகுதியில் 19,000 இளைஞர்கள் பலியாகினர்

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

1987 தொடக்கம் 90 வரையான ஆண்டுகளில், நாட்டின் தென்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்களின்போது 19,000 இளைஞர்கள் இறந்திருப்பதாகவும், காணாமற்போனவர்களாக கருதப்படுவோரின் குடும்பத்தவர்களுக்கு, மரணச்சான்றிதழ் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

வெரித்தாஸ் சிங்கள சேவைக்கே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இம்முறை ஐக்கிய தேசியக் கட்சி நிச்சயம் வெற்றிபெறும் எனவும். கடந்த காலங்களைப் போலவே, 31 லட்சம் வாக்குகளில் ஐ தே. கவுக்கு ஒரு வாக்குக்கூட குறைவின்றி கிடைக்குமெனவும் அவர் மேலும் கூறினார்.

## கண்டியில்கண்டுபிடித்தவை சட்ட பூர்வமான வாக்குகள்

(கொழும்பு)

கண்டி மாவட்டத்தில், நேற்று முன் தினம் சில இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் சட்ட பூர்வமானவை எனவும், இவை எவ்வாறு கண்டிக்கு கொண்டுவரப்பட்டன என ஆராயப்படுவதாகவும் தேர்தல் ஆணையாளர் தன்னிடம் கூறியுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சிப் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக, இரு விசாரணைக் குழுக்கள் கண்டிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார் என தர்மசிறி சேனநாயக்கா கூறியுள்ளார்.

## ஐக்கிய தேசியக் கட்சிக்கு இம்முறை கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

ஆளும் கட்சியான ஐ தே. க எதிரணிக் கட்சிகளிடம் இருந்து மிகக் கடுமையான எதிர்ப்பை இம்முறை பெற்றுக் கொண்டிருப்பதாகவும், கடந்த இருபது ஆண்டுகளில் இத்தகைய நெருக்கடி ஏற்படுவது இதுவே முதல்தடவை என்றும் பி பி ஸியின் கொழும்பு முகவர் ஜோர்ஜ் ஆர்னி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், கடந்த பத்தாண்டுகாலமாக நீடிக்கும் உள்நாட்டுப் போரிலும், ஆயுதக் கிளர்ச்சியிலும் ஆயிரக் கணக்கான மக்கள் உயிரிழந்திருக்கின்ற போதும் இலங்கை மக்களுக்கு இந்த தேர்தல் பிரசாரத்தின் போது இடம்பெற்ற வன்செயல்களின் பரிமாணம் பெரும் அதிர்ச்சியையே கொடுக்கின்றது என்றார்.

## ஐ. தே. கவினர் பலர் பொ. ஐ. முவிற்கு தாவல்

(கொழும்பு)

எங்கும் இல்லாத வகையில் கட்சிதாவுதல் இலங்கையில் துரிதமாக நடைபெற்றுவருவதாகவும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து, பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு பலர் கட்சி தாவுவதாகவும் அரசியல் விமர்சகர்கள் கூறுவதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் அடுத்தவாரம் தேர்தலின் போது அவசர காலச்சட்டங்கள் அமுலாக்கப்படலாம், மற்றும் வன்முறைகள் அதிகரிக்கலாம் என்ற பீதி மக்களிடையே பரவியிருப்பதையடுத்து அத்தியாவசியப் பொருட்களை வாங்கிச் சேர்ப்பதில் மக்கள் முன்னிற்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன எனவும் வெரித்தாஸ் கூறியுள்ளது.

## ராவய பத்திரிகைகளுக்கு அரச கூலிப்படை தீவைப்பு

(கொழும்பு)

தற்பொழுது வெளியிடப்படும் 'ராவய' பத்திரிகை மொத்தமாக வாங்கப்பட்டு தீயிட்டுக் கொளுத்தப்பட்டு வருவதாகவும் இதில் ஆயுதம் தாங்கிய அரச கூலிப்படைகள் ஈடுபட்டு வருவதாகவும் ...கள் பல லட்சக்கணக்கில் அச்சிட்டு வெளியிடப்பட்டு வருவதாகவும் இதில் உண்மைக்கு மாறான செய்திகள் வெளியிடப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரிலும் புற...

## கண்டெடுப்பு

நல்லூர் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த அ. யோகலிங்கம், ந இராஜேஸ்வரி, செ. அன்னமணி, க. தம்பித்துரை, பெ செல்வராணி, சி மார்க்கண்டு ஆகியோரின் 8 வது தொடர் வறுமை நிவாரண முத்திரைகளின் 'பி' கட்டைகள் வீதியில் கண்டெடுக்கப்பட்டு எமது பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதை உரியவர்கள் ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

## பாகிஸ்தான் வெற்றி

(கொழும்பு)

இலங்கை அணிக்கும், பாகிஸ்தான் அணிக்கும் இடையில் கொழும்பில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி 301 ஓட்டங்களால் நேற்றுமுன்தினம்வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் அணி, முதல் இன்னிங்ஸில் 390 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்ஸில் 4 இலக்குகள இழப்புக்கு 318 ஓட்டங்களையும் பெற்றது. இலங்கை அணி, முதலாவது இன்னிங்ஸில் 226 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 181 ஓட்டங்களையும் பெற்றது.

## தொலைதொடர்பு வசதி

(கொழும்பு)

தீவுப்பகுதியில் போட்டியிடும் கட்சிகளுக்கு கொழும்பிலுள்ள அவற்றின் தலைமையகங்களுடன் தொலைத் தொடர்பினை மேற்கொள்ளுவதற்கான வசதிகள் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது

## தேர்தலின் பின் ஊரடங்கு பிறப்பிக்கப்படலாம்

### பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வாக்குப் பதிவு முடிந்த பின்பு அவற்றை எண்ணும் வாக்குச் சாவடிகளில் மக்கள் கும்பல்களால் ஏற்படும் நெருக்கடிகளை தவிர்ப்பதற்கும், வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் இலங்கை முழுவதிலும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படக் கூடும் என்று, பிரதிப் பொலிஸ் மா அதிபர் கனகரத்தினம் தெரிவித்துள்ளார்,

இதேவேளை, தேர்தலை ஒட்டிய வன்செயல்கள் தலைதூக்குவதைசகித்துக்கொள்ள முடியாது என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

## கண்டி மாவட்டத்தில் கள்ள வாக்குச் சீட்டுகள்

கண்டி மாவட்டத்தில், கள்ள வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டு, அரசாங்க அமைப்புக்களினால் கொண்டு செல்லப்பட்டு உள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணி பொதுச்செயலாளர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ் வாக்குச் சீட்டுக்கள் கொழும்பு அச்சகம் ஒன்றில் அச்சிடப்பட்டு, கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகை, திரித்துவக் கல்லூரி சில்வர் டேன் வர்த்தக நிலையம் என்பவற்றுக்கு மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான வாகனங்களில் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேபோல், வாக்குப் பெட்டிகளும், சட்டவிரோதமாக கண்டிக்குள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன எனவும், தேர்தல் ஆணையாளருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஆனால் இவ்வாறான கடிதமெதுவும் தனக்கு கிடைக்கவில்லை எனவும், தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## யாழ். மாவட்டத்தில் பாரிய மோசடி ஐ. தே. க. நடத்த திட்டம்

### பொதுஜன ஐக்கிய முன்னணி கூறுகிறது

(கொழும்பு)

யாழ். தேர்தல் மாவட்டத்தில் தேர்தல் மோசடி ஒன்றை நடத்த ஐ.தே க. திட்டமிட்டுள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்-

அண்மையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இக் கருத்தை அவர் தெரிவித்துள்ளார்-

தொடர்ந்து அவர் கூறுகையில்; யாழ். மாவட்டத்தில் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள தீவுகளில் ஆறாயிரம் வாக்காளர் மட்டுமே உள்ளதாகவும் ஆனால் அரசாங்கம் அறுபதாயிரம் வாக்காளர் இருப்பதாக தெரிவிப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்-

இதனால் சுயேட்சைக் குழுவான ஈ.பி.டி.பி. நிறுத்தியுள்ள ஐ.தே.க. வேட்பாளர்களுக்கு கள்ளவாக்குகள் பெரிய அளவில் போடுவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் இது குறித்து சர்வதேச கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்-

## தொலைக்காட்சி விவாதம் சந்திரிகா நிபந்தனை

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் நேரடி விவாதத்திற்கு பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் ... வடக்கு - கிழக்கு பிரச்சினை தொடர்பாக ஐ. தே. க. தனது தெளிவான கொள்கையை தெரிவிக்க வேண்டும் என்றும், இரண்டாவதாக

பதாக அறிய வருகிறது

இவற்றை யாழ். எடுத்து வர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காட்டிய அசிரத்தையே இத் தேக்க நிலைக்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

இவற்றைத் தரம் பிரிக்கும் வேலைகள் தற்போது நடைபெற்றுவருவதாகவும்இன்னும் சில தினங்களில் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (பா,நி)

மொத்தமாக வாங்கப்பட்டு தீயிட்டுக் கொளுத்தப்பட்டு வருவதாகவும் இதில் ஆயுதம் தாங்கிய அரச கூலிப்படைகள் ஈடுபட்டு வருவதாகவும் 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலாக போலியான ''ராவய'' பத்திரிகைக்கு மாறான செய்திகள் வெளியிடப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரிலும் புறநகர் பகுதியில் இவ்வாறான நடவடிக்கை இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்-

மையகங்களுடன் தொலைத் தொடர்பினை மேற்கொள்ளுவதற்கான வசதிகள் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது

நெடுந்தீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளுக்கே இவ்வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் நேரடி விவாவதத்திற்கு பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் சந்திரிகா குமாரணதுங்கா தயாராக இருப்பதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இரண்டு நிபந்தனைகளைத் தாம் விதிப்பதாகவும் ஒன்று வடக்கு - கிழக்கு பிரச்சினை தொடர்பாக ஐ. தே. க. தனது தெளிவான கொள்கையை தெரிவிக்க வேண்டும் என்றும், இரண்டாவதாக ஐ. தே. க. ஆட்சி அமைத்தால் ரணில் விக்கிரமசிங்கா பிரதமராவார் என்பதை ஐ. தே. க. ஏற்க வேண்டும் எனவும் நிபந்தனைகளாக தெரிவிக்கப்பட்டது.

**மகோற்சவங்கள் நிறுத்தம்**

# இந்து சமயப் பேரவை ஆழ்ந்த கவலை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் கோவில், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் ஆகியவற்றில் தற்போது நடைபெறும் மகோற்சவங்களை நிறுத்துமாறு கூட்டுப்படை தலைமை அலுவலகம் அறிவித்திருப்பது குறித்து ஆழ்ந்த கவலை கொள்வதாக இந்துசமயப் பேரவை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இப் பேரவை வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் இந்துமக்கள் விரதமிருந்து தம் தெய்வங்களைப் போற்றி வழிபட்டுப் பிரார்த்தனை செய்யும் இக் காலப்பகுதியில் எவ்வித அசம்பாவிதங்களும் நடைபெறாதிருக்க ஏற்ற நடவடிக்கைகளை எடுக்குமாறும், மகோற்சவங்களை நிறுத்துமாறு விடுவிக்கப்பட்ட உத்தரவை உடன் விலக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பதுடன், ஆத்மீகத்தை ஒருபோதும் ஆயுதபலத்தால் வெற்றிகொள்ள முடியாது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**சம்பள விபரம் இடைக்கப்பெறா**

# ஆசிரியர்களுக்கு அடிப்படை சம்பளம் வழங்க பணிப்பு

(நல்லூர்)

இடமாற்றம் பெற்றுவந்துள்ள ஆசிரியர் ஒருவர், உரிய பாடசாலையில் தமதுவரவை பதிந்து கடமையேற்ற கடிதத்தை உரிய பாடசாலை அடங்கிய கோட்டக்கல்வி அலுவலகத்திற்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பியதும் அவர் முன்னர் கடமையாற்றிய பாடசாலை உள்ள கோட்டக் கல்வி அலுவலகத்தில் இருந்து உரிய சம்பளப்படிவம் கிடைக்கும்வரை அவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் மாதம் ரூபா 2010 வழங்கப்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது ஆனால் அனேக கல்விக்கோட்டங்கள் இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களுக்குஇதற்குப்பதிலாக1440 ரூபா மட்டும் அடிப்படை சம்பளம் வழங்குவது தவறானது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆசிரியர் ஒருவர் இடமாற்றம் பெற்று தமது கடமையைப் பொறுப்பேற்றதும் தற்போதைய கோட்டக்கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர், இவ் ஆசிரியர் முன்னர் கடமையாற்றிய கோட்டக்கல்வி அலுவலகத்துக்கு இவரது சுயவிபரக்கோவையையும்,சம்பள விபரத்தையும் கோரிஅதனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆசிரியர்களை வீணாக அலைக்கழிப்பதனை தவிர்த்துக் கொள்ளுமாறும் வடக்கு-கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் சகல கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கும் பொறுப்பான பிரதி கல்விப் பணிப்பாளர்களை பணித்துள்ளார். (17)

# ஆயுதப் படையினருக்கு நாம்கடிதம்அனுப்பவில்லை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக வாக்களிக்கும்படி ஆயுதப்படையினரைக் கோரி ஐ. தே. க. செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா கடிதம் ஒன்றை தயாரித்திருந்தார். ஆனால் ஜனாதிபதி தலையிட்டு அதனைத் தடுத்து விட்டார். துரதிர்ஷ்டவசமாக கடிதம் கொடுக்கப்பட்டதாக பத்திரிகைகள் பிரசுரித்து விட்டன என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கடிதம் எழுதுவது உரிய தேர்தல் நடைமுறை அல்ல என ஜனாதிபதி கூறி அதனைத் தடுத்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரான டி. எம். ஜெபரத்னாவே முழு ஆயுதப் படையினருக்கும் விநியோகிக்கும்படி கடிதமொன்றை இராணுவத் தளபதிக்கு அனுப்பியதாகவும் அக்கடிதம், நடவடிக்கைதேவைப்படின் எனக் குறிப்பிடப்பட்டு பிரதேச இராணுவ அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டதாக கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் செயலாளரான டாக்டர் விக்கிரம வீரசூரியா தெரிவித்துள்ளார்.

ஐ தே க. செயலாளர், எழுதிய கடிதம் படையினருக்கு அனுப்பப்பட்டதாக வெளிவந்த செய்திகள் தவறானவை எனவும் அவர் கூறினார்.

# கொலை, சதித்திட்டத்திற்கு அரசியலே பின்னணியில்

எனது தந்தை, கணவர் கொல்லப்பட்டதற்கும் அரசியல் பின்னணி இருந்தது. அதேபோல் என்னை கொலை செய்யத் திட்டப்பட்டுள்ள சதிக்கும் அரசியற் பின்னணியே காரணமாக உள்ளது எனப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவி சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

வறக்காப் பொலையில் இடம்பெற்றகூட்டமொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். பழிவாங்கும் எண்ணம் என்னிடம் இல்லை, எனது கணவரைக் கொன்றனர், இன்று என்னையும் கொலை செய்ய முயல்கின்றனர் இதற்கெல்லாம் பின்னணியில் அரசியல்வாதிகளே உள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

## நாட்டுக்கூத்து

கரவெட்டி பரலோக மாதா தேவாலய திருநாளை ஒட்டி யாழ். திருமறைக்கலா மன்றம் ஆலய முன்றலில் இன்று திங்கட்கிழமை இரவு 8.00 மணிக்கு ''அனைத்தும் அவரே'' (நாட்டுக் கூத்து) ''நெஞ்சக் கனகல்'' (நவீன நாடகம்) மற்றும் ''மூன்றுகேள்விகள்'' நாடகம் ஆகியவற்றை மேடையேற்ற உள்ளது.

## வருடாந்த மஹோற்சவம்

மீசாலை வடக்கு அருள்மிகு ஸ்ரீ இராமாவில் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் பக்திபூர்வமாக ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து எதிர் வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 3 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 22 ஆம் திகதி பி.ப 2 மணிக்கு புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டவிழாவும், 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பறத்திருவிழாவும், 24 ஆம் திகதி 8 மணிக்கு தேர்த்திருவிழாவும், 25 ஆம் திகதி காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், 26 ஆம் திகதிபி ப. 4மணிக்கு திருக்கல்யாணமும் நடைபெறும். (86)

## பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்- மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர கனிஷ்ட பிரிவிற்கான பயிற்சி நெறி செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட இருக்கின்றது. கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களிற்கு மட்டும் நடாத்தப்படவிருக்கும் இப்பயிற்சிநெறியில் பயிற்சி மேற்கொள்ள விரும்புவோர் இம்மாதம் 26-ம் திகதிக்கு முன் தமது விண்ணப்பங்களை மேற்படி கல்லூரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றனர். விண்ணப்பதாரிகள் எட்டாம் வகுப்பு சித்தி பெற்றவராகவும், 45 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும் எனவும் அறிவிக்கப்படுகின்றது. (22)

# வடக்கு, கிழக்கில் தேர்தல் மனித உரிமை மீறல்

## இலங்கை மனித உரிமை நிறுவன தலைவர்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் தேர்தல் நடத்துவது என்பது மனித உரிமை மீறும் சம்பவம் என இலங்கை மனித உரிமைகள் நிறுவனத்தின் தலைவர் சூரிய விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

மக்களை முழுமையாகபிரதிநிதித்துவம் செய்யும் பிரதிநிதிகளே தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட வேண்டும் என்றும் அதனை விட்டு மக்களின் ஒரு சிலரை மட்டும் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளுக்கு எந்த வகையிலும் இடம் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். சுமார் நான்கு பக்கங்களை உள்ளடக்கி இவ் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இவ் அறிக்கைகளின் பிரதிகள் உலகில் உள்ள சகல பொது அமைப்புக்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதில் மனித உரிமை மீறும் இந்த நடவடிக்கையை உடன் நிறுத்த வழி செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (பா, நி)

# வன்செயலை எதிர்கொள்ள படைகள் தயார்நிலையிலாம்

## அதிகாரிகள் உறுதி தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் வாக்களிப்பு நடைபெற்ற பின்னர் நடைபெறும் என எதிர்பார்க்கும் வன்செயல் மற்றும் எந்த சம்பவத்திற்கும் முகம்கொடுக்கக் கூடிய தயார் நிலையில் தாம் இருப்பதாக முப்படைகளின் தளபதியும்,பொலிஸ்மா அதிபரும் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்றபாதுகாப்புமாநாட்டில், தேர்தலின் பின்னர் நடைபெறும் என எதிர்பார்க்கும் வன்செயல் தொடர்பாக முன்னோடி நடவடிக்கை குறித்து ஆராயப்பட்ட போது இத்தகவலைத் தெரிவித்துள்ளனர்-

இந்நடவடிக்கைக்காக முற்றிலும் வேறுபட்ட பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக தெரிவித்துள்ளனர்,

## கருத்தரங்கு

யாழ் விஞ்ஞான சங்கத்தின் சமூகப் பிரிவினரால் இலங்கையின் தேர்தல்களும் தேர்தல் மாவட்டங்களும் விகிதாசாரப் பிரதிநிதித்துவமும் பற்றியஒருபகுப்பாய்வுஎன்றதலைப்பிலான கருத்தரங்கு பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளையால் இன்று திங்கள் பிற்பகல் 3 மணிக்கு புவியியற் துறை மண்டபத்தில் நடைபெறும்.

## ஜே.வி.பி. என எண்ணி தே.மீ. முக்கு வாக்களியாதீர்

### மத்திய குழு பிரமுகர் கோரிக்கை

(கொழும்பு)

ஜே.வி.பியின் பெயரை பயன்படுத்துவதற்கு எவருக்கும் உரிமை கிடையாது என்றும் இவர்களை மக்கள் இனம் காணுமாறும் ஜே.வி.பி. மத்திய கமிட்டி அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

ஜே.வி.பிக்கு வாக்களிப்பதாக எண்ணி தேசிய மீட்பு முன்னணி எனும் கட்சிக்கு வாக்களிக்க வேண்டாம் என்றும்தொடர்ந்துஜே.வி.பி மீதுஅரசுகடை விதித்துள்ளது என்றும் ஜே.வி.பி மத்திய குழு அறிவித்துள்ளது,

ஜே.வி.பி. என்று கூறி இம்முறை தேர்தலில் தேசிய மீட்பு முன்னணி எனும் புதிய இளைஞர் கட்சி ஒன்று போட்டியிடுவது தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஜே.வி.பி. பிரமுகர் ஒருவரே மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளார்.

## கொழும்பு மாவட்டத்தில் சுசிலும் சிறிமானியும் அதிக விருப்பு வாக்குகள்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில், கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும், ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை விட சுசில் முனசிங்காவே கூடிய விருப்பு வாக்குகளை பெறுவார் என கொழும்பு வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

எதிரணியில் போட்டியிடுபவர்களில், சிறிமானி அத்துலத்முதலியும் அதிக விருப்பு வாக்குகளை பெறக் கூடிய ஒருவர் எனவும் அவ் இதழ் தெரிவித்துள்ளது.

## வன்செயலை நிறுத்த அபேட்சகரை கோரவும்

### கட்சித்தலைவர்களிடம் ஜனாதிபதி

(கொழும்பு)

தேர்தலின் பின்னர் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் வன் செயலை நிறுத்துமாறு சகல கட்சித் தலைவர்களும் தத்தம் கட்சி அபேட்சகர் மூலம் வலியுறுத்த வேண்டும் என ஜனாதிபதி டி.பி விஜேதுங்கா கேட்டுக் கொண்டுள்ளார்.

சட்டம், ஒழுங்கு ஏற்படுத்துவதற்கு பொலிஸ், இராணுவத்தினருக்கு பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் அவர் மேலும் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

## தொடர்பு சாதன கட்டுப்பாடு டி.பி யிடம் இல்லை

### ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனமும், ரூபவாகினிக் கூட்டுத்தாபனமும ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்வாறு பி.பி.சியின் சந்தேசிய ஒலிபரப்பு ஒலிபரப்பிய செய்தி முற்றிலும் தவறானதாகும் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது அத்துடன் இந்தச் செய்தி முற்றிலும் பொய்யானதும், அரசாங்கத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கமுடையதும் ஆகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எந்தவொரு திணைக்களத்தையோ அல்லது அரசாங்க நிறுவனத்தையோ தமது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் நோக்கம் தமக்கு கிடையாது எனவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

## பொ.ஐ.மு. வன்முறைகளில் எல்லை கடந்து செல்கிறது

ஐ. தே. க பொதுச்செயலர் குற்றச்சாட்டு

# 5 லட்சம் சிறுபான்மை வாக்குகளுக்காக 80 லட்சம் சிங்களவர் உரிமையை இழப்பதா?

## திவயின சிங்கள தினசரி கேள்வி

இ.மு. 5ஆம் நூற்றாண்டிலிருந்து 17ஆம் நூற்றாண்டு காலப்பகுதி வரை இலங்கை 'சிங்களே' எனும் பெயரிலேயே அழைக்கப்பட்டு வந்துள்ளது. சிங்கள மக்கள் எனக் குறிப்பிடப்படுவது தனியான மொழி, கலாசாரம், பண்பாடு என்பவற்றால் உருவான தனிப்பட்ட ஒரு மக்கள் பிரிவாகும். அவர்களுக்கென சில பிரதான விருப்பு, வெறுப்புகள் தேவைகள் என்பன உள்ளன. எந்த நாட்டிலும் வாழும் பிரதான மக்கள் பிரிவினதும் உண்மை நிலை இதுவாகும். தமிழ் மக்களின் தாயகமான தமிழ்நாடு பிராந்தியத்தின் நிலையும் அவ்வாறாகவே காணப்படுகின்றது.

இலங்கையின் நிலைவரத்தை ஆராயும் முன்னர் உலகளாவிய ரீதியில் தமிழ் மக்கள் எவ்வாறு பரவியிருக்கின்றனர் என்பதை ஆராய்தல் சிறப்பாகும். இந்தியாவை விட இலங்கை 54 மடங்கு சிறியது. சர்வதேச ரீதியில் காணப்படும் தமிழர் தொகையில் 5சதவீதத்திற்கும் குறைவான தமிழர்களே இங்கு வாழ்கின்றனர். அதற்கேற்ப 5 சதவீதத்திற்கும் குறைவானதோர் சர்வதேச மக்கள் தொகைக்கு இலங்கை மண்ணில் ஒரு பகுதியை தாயகமாக கோருவது கேள்விக்குரியதாகும். அதனை ஏற்றுக் கொள்வதும் நகைப்பிறகிடமானது.

2500ஆண்டுகளுக்கும்அதிகமானகாலம்தொட்டு 1948-ல் சுதந்திரம் கிடைத்து 30 ஆண்டுகள் வரையிலும் இலங்கையின் பிரதான மொழியாக சிங்களம் விளங்கியது. 1956 இல் அது மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. எனினும் 1978இல் ஏற்படுத்தப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினால் அதில் மாற்றம் ஏற்பட்டது. அந்தக் காலகட்டத்தில் 12.6 சதவீத இலங்கைத்தமிழர்களினதும்5 5 இந்தியத் தமிழர்களினதும் மொழியான தமிழ் அரச கரும மொழியாக்கப்பட்டது. பெரும்பான்மை இனத்தின் கருத்துகள் அறியப்படாமலேயே அவ்வாறு செய்யப்பட்டது சுயநலமிக்க அரசியற் தலைவர்களின் தேவையாக இருந்தது தமிழர்களின் வாக்குகள் மட்டுமே அதற்காக எதனையும் தாரைவார்க்க அவர்கள் தயாராக இருந்தனர்.

இலங்கையைத்தவிர வேறெந்த நாட்டிலும் தமிழ் மொழியை அரச கரும மொழியாக அமுல்படுத்தப்படவில்லை. தமிழ்மொழி தமிழ்நாடு பிராந்தியத்தின் மொழியே அன்றி சர்வதேச மொழி அல்ல எனினும் சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளிலும் தமிழ் மொழியையே உபயோகிக்கும்படி நிறைவேற்று அதிகாரம் கொண்ட முன்னாள் ஜனாதிபதிகள் காலத்தில் கட்டாயப்படுத்தப்பட்டது.

இலங்கையின் சனத்தொகையையும் வாக்குகளின் எண்ணிக்கையையும் ஆராய்ந்து நோக்க வேண்டியுள்ளது. புள்ளி விபரங்களுக்கு ஏற்ப இந்தியத் தமிழ் மக்கள் 5,30,000 பேர் உள்ளனர். அவர்களில் அதிகமானோர் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்படவேண்டியவர்கள். பதிவாகியிருக்கும் தொகை இதைவிட மிகக்குறைவு. எனவே 5 இலட்சம் வாக்குகளும் தொண்டமானுக்குத் தான் கிடைத்து வருகிறது என்பதில் உண்மை இருக்க முடியாது.

அஷ்ரப்பின் 5 இலட்சம் வாக்கும் இப்படித்தான். இலங்கையில் முஸ்லிம் வாக்காளர்களின் தொகை 8 இலட்சத்திற்கும்குறைவானதாகும். இவற்றில்வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் எண்ணிக்கை 2,80,000 ஆகும். எஞ்சிய வாக்குகள் ஏனைய ஏழு மாவட்டங்களிடையே பிரிந்து செல்கிறது. இவற்றில் அஷ்ரப்பிற்கு கிடைத்த உண்மையான வாக்குகளின் எண்ணிக்கையைக் கருத்திற் கொள்ளும் போது 5 இலட்சம் வாக்குக் குவியல் பற்றிய அவரின்கூற்று விந்தையானதே.

1989 பொதுத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் பெற்ற முழு வாக்குகளின் தொகை 2,02,016 ஆகும். 1993 இல் நடைபெற்ற மாகாணசபைகளுக்கானதேர்தலில்1,43,000க்கும்சற்று கூடுதலான வாக்குகளை முஸ்லிம் காங்கிரஸ் பெற்றது. 5 இலட்சம் வாக்குகளை பெற்றுத் தருவதாகக் கூறும் தொண்டமானும், அஷ்ரப்பும் நாட்டின் சிங்கள வாக்காளரின் தொகை பற்றிப் பேசுவதில்லை. 80 லட்சம் சிங்கள வாக்காளர்கள் இந்நாட்டில் உண்டு.

இந்தப் புள்ளி விபரங்கள் குறித்து அறிவற்ற சிங்களப் பெரும்பான்மை கட்சிகளின் தலைவர்கள் சிறுபான்மையினரின் கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்ற முன்வருகின்றனர்.

ஐ.தே.கவும், சுதந்திரக் கட்சியும் இன்று சிறுபான்மையின் 5 இலட்சம் வாக்குகளுக்காக 80 லட்சம் மக்களின் உரிமைகளையும் அதிகாரங்களையும் பலியிட உறுதி பூண்டுள்ளன.

உண்மையான ஜனநாயகம் என்பது 80 லட்சத்திற்கும் அதிகமான சிங்கள வாக்காளர்களின் வாக்குப் பலத்தால் அதிகாரத்திற்கு வந்து சிறுபான்மையினருக்கு இடையூறு ஏற்படாதவாறு ஆட்சி செய்வதாகும். மாறாக 5 இலட்சம் வாக்காளரின் அபிலாஷைகளுக்கு ஏற்பவல்ல. மேலும அரசியல் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது 5 லட்சம் சிறுபான்மையினருக்கு வழங்கப்படும் உறுதிமொழிகளை நிறைவேற்றி வைப்பதற்காக அல்ல.

இச்சந்தர்ப்பத்தில் சாதாரண சிங்கள மக்கள் 3 முக்கிய விடயங்கள் தொடர்பாக தீர்வொன்றை நாடியுள்ளனர். முதலாவது வடக்கு கிழக்கை வழமைபோல் இரண்டாகப் பிரிப்பது. நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களை அதே அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதியினால் பிரிக்கக் கூடியதாகவும் உள்ளது. எனினும் ஜனாதிபதிகளான ஜெயவர்த்தனா, பிரேமதாசா, விஜேதுங்கா மூவருமே அதைச் செய்யத் தவறிவிட்டனர், அல்லது தட்டிக் கழித்துவிட்டனர்.

இரண்டாவது, திருப்பியனுப்பப்பட வேண்டிய இந்தியத் தமிழர். 1991ஆம் ஆண்டளவில் இந்திய விசா பெற்றிருக்கும் சுமார் 1,32,000பேர் இன்னும் இந்தியாவுக்கு அனுப்பப்படவில்லை.

மூன்றாவது முக்கிய பிரச்சினை வடக்கு-கிழக்கு தீவிரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவது தெற்கில் சிங்கள தீவிரவாதத்தை ஆட்சியாளர்கள் மிகக் கடுமையான முறையில் அடக்கி ஒடுக்கினர். எனவே வடக்கு தீவிரவாதத்தைதீர்க்கமட்டும்பேச்சுவார்த்தைகள் அவசியமா? வடக்கின் தீவிரவாதத்தைப் பேச்சுவார்த்தை அடிப்படையில் தீர்க்க வழியில்லை எனில் புரையோடிய புண்ணைப் போன்ற அதை யுத்த அடிப்படையிலேயே தீர்க்க வேண்டியது கட்டாயமாகும்.

80 இலட்சம் சிங்கள வாக்குகளில் பெரும்பகுதியை சுவீகரித்துக் கொள்ளும் ஐ.தே.கவும், சுதந்திரக் கட்சியும் இந்த அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வாங்குகின்றன. அதற்கான காரணம் அஷ்ரப் - தொண்டமான் இருவரினதும் 5 இலட்சம் வாக்குக் குவியல்களா? அவ்வாறாயின் சிங்கள மக்கள் வேறு மாற்று நடவடிக்கையை நாடி செல்ல வேண்டிவரும்.

# பஸ்ஸை சோதனையிட்ட போது பொலிசார் மீது தாக்குதல்

### மன்னாரில் பொலிஸ் நிலையத் தாக்குதல்குறித்து விபரிப்பு

(கொழும்பு)

மன்னார் தீவில் பி எம். பி பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டதையடுத்து அங்கு இராணுவத்தினர் தேடுதல் நடத்தி வருகின்றனர் பஸ்மூலம் வந்து விடுதலைப்புலிகள் பொலிஸ் தனர்.

பேசாலையிலிருந்து மன்னார் வந்த மேற்படி பஸ்ஸை இடையில் புலிகள் நிறுத்தி பயணிகளை இறக்கிவிட்டு அதே பஸ்ஸில் சீருடையில் சென்றே பொலிஸ் நிலையத்தை தாக்கினையிட பொலிஸார் வந்த போது தாக்குதலை புலிகள் ஆரம்பித்தனர். பின்னர் பொலிஸ் நிலையம் இருந்த கட்டடப்பொருள் கூட்டுத்தாபன கட்டடம் குண்டுவைத்து புலிகளால் தகர்க்கப்பட்ளை மேற்கொள்ளச் சென்ற கட்சிகளின் வேட்பாளர்கள் தாம்பாதிக்கப்படவில்லைஎன உறவினர்களுக்கு அறிவித்துள்ளனர்.

## களுத்துறை துப்பாக்கிச் சூட்டு சம்பவம்

## உருவப்படம் திரைநீக்கம்

1991ம் ஆண்டு ஆனையிறவு ஆகாய கடல் வெளித் தாக்குதலில் வீரச்சாவடைந்தவீரவேங்கை அமுதப்பிரியா (அகிலகுமாரி - பரமலிங்கம்- புங்குடுதீவு) அவர்களின் திருவுருவப் படம் அண்மையில்தீவக மக்கள் தங்கியுள்ள யாழ்-ஐந்து சந்தி முஸ்லிம் பகுதியில் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் தீவகக் கோட்டப் பொறுப்பாளரினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (22)

முற்றிலும் தவறானதாகும் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது அத்துடன் இந்தச் செய்தி முற்றிலும்

டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் நோக்கம் தமக்கு கிடையாது எனவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

## பொ.ஐ.மு. வன்முறைகளில் எல்லை கடந்து செல்கிறது

### ஐ. தே. க பொதுச்செயலர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி தொடர்ந்து வன்முறைகளை மேற்கொள்ளுமாயின் தேர்தலின் பின்னர் இதனை கட்டுப்படுத்த முடியாத ஓர் நிலை ஏற்படும் என ஐக்கிய தேசிய கட்சி பொதுச்செயலாளர் காமினி விஜேசேகர தெரிவித்துள்ளார்.

வன் செயலுக்கு ஓர் எல்லை இருப்பதாகவும் பொது ஜன ஐக்கிய முன்னணி அதனைக் கடந்து சென்றுவிட்டதாகவும் இதனை தவிர்க்கும் முகமாகவே தேர்தலின் பின்னர் ஊரடங்கு சட்டம் அமுல் படுத்தப்படலாம் என்று அவர் குறிப்பிட்டார் இதற்கான முன்னேற்பாடாகவே ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் போது நடமாடுவதற்கான விசேட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்

## சொத்தி உபாலிக்கு தொடர்ந்து விளக்க மறியல்

(கொழும்பு)

கடந்த மே மாதம் 3ஆம் திகதி நீர்கொழும்பு நீதிமன்றில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சொத்தி உபாலியும் மற்றும் 10பேரும் இம் மாதம் 22 ஆம் திகதி வரை மீண்டும் விளகக மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கள் அன்று நீர்கொழும்பு நீதவான் எல்- யு- ஜயசூரியா முன் னிலையில் ஆஜர் செய்யப்பட்ட பின்னரே இவர்கள் மீண்டும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்-

## வெற்றி பெற முன்பே பதவிக்கு இழுபறி

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணிப்பிரமுகர்கள்வெற்றி பெற முன்பே அமைச்சர் பதவிகளுக்கு இடம் பிடிப்பதில் போட்டியிடுவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

நிதியமைச்சர் பதவிக்குகிங்ஸ்லி விக்கிரமரத்னாவும் மகாவலி அபிவிருத்தி அமைச்சு மகிந்த ராஜபக்சவுக்கும் கிடைக்கும் என சம்பந்தப்பட்டவர்கள் கூறியுள்ளதாகவும், இது கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களை ஓகாபத்திற்குள்ளாக்கியதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

## அம்பாறையில் மீளகுடியமர 313 குடும்பங்கள் மறுப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் 313 அகதி குடும்பங்கள் மீளக் குடியேற தயக்கம் தெரிவித்துள்ளன. இவர்கள் காரை தீவு பகுதியைச் சேர்ந்தவர்கள்.

வளகாபிட்டி பகுதியில் இவர்களை குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் ஆனால் போதிய நீர் வசதியற்ற இப்பகுதியில் குடியேற இவர்கள மறுத்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### மன்னாரில் பொலிஸ் நிலையத் தாக்குதல்குறித்து விபரிப்பு

(கொழும்பு)

மன்னார் தீவில் பி எம். பி பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டதையடுத்து அங்கு இராணுவத்தினர் தேடுதல் நடத்தி வருகின்றனர் பஸ்மூலம் வந்து விடுதலைப்புலிகள் பொலிஸ் நிலையத்தை தாக்கி விட்டு அதேபஸ்ஸில திரும்பிச்சென்று பின்னர் பஸ்ஸை கைவிட்டு படகுமூலம்தப்பிச்சென்றுவிட்டதாக அதிகாரிகள்தெரிவித்தனர்.

பேசாலையிலிருந்து மன்னார் வந்த மேற்படி பஸ்ஸை இடையில் புலிகள் நிறுத்தி பயணிகளை இறக்கிவிட்டு அதே பஸ்ஸில் சீருடையில் சென்றே பொலிஸ் நிலையத்தை தாக்கியதாக தெரிவிக்கப்படுகின்றது பொலிஸ் நிலையம் முன்பாக இந்த பஸ்ஸின் முன்னால் சென்ற பஸ்ஸை சோதித்து விட்டு இந்த பஸ்ஸை சோதனையிட பொலிஸார் வந்த போது தாக்குதலை புலிகள் ஆரம்பித்தனர். பின்னர் பொலிஸ் நிலையம் இருந்த கட்டடப்பொருள் கூட்டுத்தாபன கட்டடம் குண்டுவைத்து புலிகளால் தகர்க்கப்பட்டது

தாக்குதல் நடந்ததையடுத்து அங்கு தேர்தல் பிரசாரங்கள் இரத்தாகின. பிரசாரங்களை மேற்கொள்ளச் சென்ற கட்சிகளின் வேட்பாளர்கள் தாம்பாதிக்கப்படவில்லைஎன உறவினர்களுக்கு அறிவித்துள்ளனர்.

## பொ. ஐ. மு. கொள்கைகளே அமுல் செய்யப்படும்

### பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ்

(கொழும்பு)

ஐ-தே. கவைச் சேர்ந்தவர் ஜனாதிபதி பதவியில் இருந்தாலும், தேர்தலில் வெற்றி பெறறு ஆட்சியமைக்கும் பட்சத்தில் பொது ஜன ஐக்கிய முன்னணியின் கொள்கைகளே அமுல் நடத்தப்படும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் மந்திரிசபையே சட்டதிட்டங்களை வகுக்கும், என பொது ஜன ஐக்கிய முன்னணியின் முக்கியஸ்தரான பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்

இராணுவத்தினர் மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் பிரசாரம் செய்கிறது. இது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதல்ல, இராணுவத்தை அரசியல் மயமாககுவது பாரதூரமானது. இதை நாம் கவனமாகப் பரிசீலிக்கிறோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## யூலை மாத விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தோருக்கான யூலை மாத முதல் இரண்டு வார நிவாரண உலர் உணவுப் பொருட்களாக அரிசி, மாவு, சீனி, மைசூர் பருப்பு, பட்டாணிப்பருப்பு, தேயிலை, லக்ஸ்பிறே, சவர்க்காரம்ஆகிய பொருட்கள் வழங்கப்படும் என யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியின் விநியோகப் பட்டியலில் தெரிவிக்கப்படுகின்றது. (22)

## யாழ்ப்பாணம் சென்று நிபந்தனையற்ற பேச்சு

### புலிகளுடன் பேச்சுவார்த்தை குறித்து சந்திரிகா

(கொழும்பு)

நான் ஆட்சியமைத்ததும் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்த யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவேன் இதற்கு அங்கு நல்ல வரவேற்பு கிடைக்கும் என சந்திரிகா குமாரணதுங்கா பததிரிகையாளர் சந்திப்பொன்றில் தெரிவித்தார்.

எனது உயிருக்கு ஆபத்து இருப்பதாக பலர் கூறிவந்தனர். அவற்றை நான் கவனத்தில் கொள்ளவில்லை. நாட்டின் இனப்பிரச்சினையை தீர்க்க நாம் மக்களின் ஆணையை கேட்டுள்ளோம் மாகாணசபையை விட அதிக அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்வு காணலாம். கொடுக்கப்படும் அதிகாரங்கள் அமுல் படுததப்படுவதை உறுதி செய்வேன், வடக்கு - கிழக்கு இணைக்கப்படமாட்டாது என்று குறிப்பிட்டார்.

விடுதலைப்புலிகளிடம் நம்பிக்கை உண்டா என்று செய்தியாளர்கள் கேட்டபோது அது குறித்து அவர்களை சந்தித்த பின்பே கூறமுடியும் என்றார். ஆட்சியை ஒப்படைககு தற்போதைய அரசு மறுத்தால் என்ன செய்வீர்கள் எனக் கேட்டபோது அதற்கு மாற்று மருந்து என்னிடம் உண்டு இப்போது அதைவெளியிட மாட்டேன் என சந்திரிகா குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் செல்லும் குழுவில் நீங்களும் இடம்பெறுவீர்களா எனக்கேட்டபோது, புலிகளுடன் பேச்சுநடத்தவே அங்கு செல்கிறோம். பின் பேன் பயப்படவேண்டும்? யாழ்ப்பாணம் செல்வதில் பெரு மகிழ்ச்சி கொள்வேன் என சந்திரிகா பதிலளித்தார்.

புங்குடுதீவு) அவர்களின் திருவுருவப் படம் அண்மையில் தீவக மக்கள் தங்கியுள்ள யாழ்-ஐந்து சந்தி முஸ்லிம் பகுதியில் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் தீவகக் கோட்டப் பொறுப்பாளரினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (22)

களுத்துறை துப்பாக்கிச் சூட்டு சம்பவம்

## ஐ. தே. கட்சி வேட்பாளர் பிணையில் விடுதலை

(கொழும்பு)

கடந்த ஜூலை 17 ஆம் திகதி களுத்துறை பாலத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவத்துடன் தொடர்புடைய களுத்துறை மாவட்ட ஐ தே க. வேட்பாளர் லஷ்மன் விஜயமன்ன 10ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

துப்பாக்கிச் சூட்டினால் ஒருவர் காயமடைந்திருந்தார். எனினும் துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவம் தொடர்பாக ஒரே ஒரு சாட்சியே இருப்பதாகவும் இது வேட்பாளரை தேர்தலில் இருந்து நீக்கிவிட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை எனவும் அவ் வேட்பாளரின் சட்டத்தரணி விவாதித்தார். இதைத் தொடர்ந்தே அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

## கொழும்பு துறைமுக வேலைகள் மந்தநிலையில்

(கொழும்பு)

கொழும்பு துறைமுக பொறியியலாளர்கள் கடந்த வியாழன்முதல் திடீர் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

இத்தரத்திலான உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படாததை ஆட்சேபித்து ஆரம்பிக்கப்பட்ட இவ் வேலை நிறுத்தத்தினால் துறைமுகத்தில் பொருள் ஏற்றி இறக்கும் பணிகள் மந்தகதியடைந்தன.

## யாழ்.பல்கலைக்கழகம் 2:0 கோலினால் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ் றோட்டறட், எஸ். எம். பெர்ணாண்டோ நிறுவனத்தின்ஆதரவில்யாழ்மாவட்டமட்டத்தில் நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் யாழ் பல்கலைக்கழக அணி சம்பியனானது.

உதைபந்தாட்ட புதிய மைதானத்தில் இடம்பெற்ற இவ் ஆட்டங்களின்இறுதியில் அராலி அண்ணா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்துவிளையாடிய யாழ் பல்கலைக்கழக அணி 2:0 என்ற கோல்கணக்கைப்போட்டு வெற்றியை தமதாக்கி சம்பியனானது பல்கலைக்கழக அணியின் வீரர்களான எஸ். ஜ. கென்றிசன் நிலான், எ. தயாபரன், வி. சிவகுணன், எ. அன்ரன்சிசில் ஆகியோரின் அபார விளையாட்டினால் பல்கலைக்கழகம் சம்பியனானது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக அணியின் இறுதிநேர ஆட்டத்தில் பல்கலைக்கழக பந்துகாப்பாளர் பி. பரராஜசிங்கமபாபு, எ. துரைராஜரட்ணம் (ராஜன்) ஆகியோர் சிறப்பாக விளையாடினர். (05)

## சிந்தனைக்கு..

கடந்த காலமே நிகழ் காலத்தின் பலம்; அதை புறக்கணிப்பதை விடப் பெருந்தவறு வேறில்லை.

- அலெக்ஸாண்டர் ஹேர்சன்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 15-08-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05


## சந்திரிகாவுக்கு ஏற்பட்ட ஞானோதயம்

யாழ். மாவட்டம் தீவுப்பகுதியில் நடைபெறவுள்ள தேர்தலில் பெரியளவில் மோசடிகள் இடம்பெறவாய்ப்புள்ளதாக எச்சரித்துள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதித்தலைவியான சந்திரிகா குமாரணதுங்கா, அரசாங்க சார்பு ஆயுதக் குழுவான ஈ.பி.டி.பி, அதில் ஈடுபடத் திட்டமிட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத் தேர்தல் குறித்து சந்திரிகா குமாரணதுங்காவிற்கு எழுந்துள்ள இந் ஞானோதயம், காலம் கடந்த ஒரு சிந்தனை என்றே கொள்ளவேண்டும். வடக்கு-கிழக்கு பகுதியில் எங்கும் தேர்தல் நடத்தக்கூடிய சூழ்நிலை இல்லை என்பது சகலருக்கும் தெரிந்த விடயமாகும் ஆயினும் கிழக்கில் இராணுவத்தின் துணையுடன்பெயருக்குத்தானும் ஒரு தேர்தலை நடத்தக்கூடும் எனினும், வடக்கில் முற்றாகவே தேர்தல் நடத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதே நிதர்சனம்

வடக்கில் பெருமளவு நிலப்பரப்பும், பெருமளவு மக்களும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியிலேயே வாழ்கின்றனர். இந்நிலையில் யாழ். குடாநாட்டிலும், வன்னியிலும் தேர்தல் என்பது ஒரு அரசியல் கேலிக்கூத்து என்பது எவருக்கும்சொல்லித்தெரிய வேண்டிய அவசியம் இல்லை.

இந்நிலையில் வடக்கில் தேர்தல் என அரசாங்கம் அறிவித்தபோதே ஒரு பெரும் மோசடி நடைபெறப்போவதென்பது உறுதியாகிவிட்டது. அத்தோடு, இராணுவத்தால் 'விடுவிக்கப்பட்ட பகுதி' எனக்கூறப்படும் பிரதேசங்களில், அரசிற்கு ஆதரவான ஆயுதக்குழுக்கள் இருப்பதும் தெரிந்தவிடயமே. இந்த வகையில் இங்குள்ள மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கக் கூடிய நிலையில்

-விவசாயம்-

# முருங்கைப்பயிர்ச்செய்கை அபிவிருத்தி

தமிழீழத்தில் விவசாயம் சார் உற்பத்தி நடவடிக்கைகளை மண்ணெண்ணெய்யின் விலை ஏற்றமும் தட்டுப்பாடும் பெரிதும் பாதித்துள்ளது. காலத்திற்குகாலம்மண்ணெண்ணெய்யின் விலை ஏற்றம் குறிப்பாக நீர்ப்பாசனத்திற்கான செலவினங்களை அதிகரித்துள்ளது இதனால் விவசாயிகள் மட்டும் அல்லாமல் நுகர்வோரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு குடும்பத்தினரும் தமக்கு தேவையான மரக்கறிவகைகளை வெளிச் சந்தையில் கொள்வனவு செய்யும் போது கணிசமான அளவு குடும்ப வருமானம் விரயமாகிறது. நீர்ப்பாசனம் இல்லாமலே உற்பத்தி செய்யக் கூடிய பயிராகிய முருங்கை எமது மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும். இப்பயிரை ஒவ்வொரு குடும்பத்தவரும் உற்பத்தி செய்வதன் மூலம் குடும்ப செலவினத்தை குறைத்துக் கொள்வதுடன், வெளிமாவட்டத்திற்கு மண்ணெண்ணெய்கொள்வனவுசெய்வதற்காக அனுப்பப்படும் பணத்தையும் மீதப்படுத்த முடியும்.

முருங்கைப் பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமான கால நிலையும் மண்வளமும் எமது நாட்டில் நிறைந்து காணப்படுகின்றது மிக இலகுவாக உற்பத்தி செய்யக்கூடிய பயிர்களில் முருங்கையும் ஒன்றாகும். முருங்கை நன்றாக வரட்சியை தாங்கவல்ல பயிராகும். நீர்வடிமானம் உள்ள எல்லா மண்வகைகளிலும் செழித்து வளரவல்லது. மணல் சார்ந்த ஆழமான இருவாட்டி மண் முருங்கை பயிர்செய்கைக்கு மிகப் பொருத்தமானது. ஆனி, ஆடி மாதங்கள் முருங்கை நடுவதற்கு ஏற்ற காலமாகும்- பொதுவாக '4-6' அடி நீளமான துண்டங்களை கூடிய விளைவுதரும் தாய் மரங்களில் இருந்து பெற்று விருத்தி செய்யப்படுகின்றது நடுகைத் துண்டங்கள் தெரிவு செய்யும் போது முதிர்ச்சியடையாத இளம் துண்டங்களும், பிசின் வடிந்து காணப்படும் துண்டங்களும் தவிர்க்கப்படல் வேண்டும்-

மண் வளத்தை பொறுத்து 15-20' அடி தூர இடைவெளிகளில் நடலாம்- நடுவதற்கு $1\frac{1}{2} \times 1\frac{1}{2} \times 1\frac{1}{2}$ அடி நீள, அகல ஆழமான குழிகளை வெட்டி துண்டங்களை குழியின் நடுவில் வைத்து மேல் மண்ணுடன் நன்கு உக்கிய கூட்டெரு அல்லது மாட்டெருவுடன் கலந்து மூடி விடவும் குழிகளில் நீர் தேங்கி நிற்காதவாறு மண்ணை உயர்த்தி புருவம் போல் துண்டத்துடன் சேர்த்து அமைத்து விடவும்- துண்டங்களை தளைக்கும் வரை நீர் ஊற்றி பராமரிக்கவும்- நட்டு சராசரி இரண்டு மாதங்களுக்கு நீர் ஊற்றி பராமரித்தால் போதுமானது- பின் தானாகவே வளர்ந்து பலன் தரும்- மிக இலகுவாக பயிரிடக்கூடிய முருங்கைப் பயிரை வேலி ஓரங்களிலும், வீட்டுத் தோட்டங்களிலும் தரிசுக்காணிகளிலும் பயிரிட்டு பயன் பெறலாம்-

இன்று நாம் சந்தைகளில் வாங்கி உண்ணும் மரக்கறி வகைகளில் குறிப்பிடத்தக்க அளவு கிருமிநாசினிகள் செறிவு காணப்படுகின்றது. கிருமிநாசினி செறிந்த மரக்கறி வகைகளை உண்பதால் பலவிதமான நோய்களால் பாதிக்கப்படுகின்றோம். முருங்கைப் பயிரைக் கிருமிநாசினி பாதிக்காமல் வளர்க்க முடியும். பொதுவாக முருங்கை பயிரைத்தாக்கும் நோய்பீடைகள் மிகக்குறைவு, தை,மாசி மாதங்களில் இலை அரிபுழுக்களின் தாக்கம் காணப்படலாம். இவ் இலை அரிபுழுக்கள் ஆரம்பத்தில் தாய் மரத்தின் அடியில் அல்லது அடிக் கொப்புகளில் கூட்டமாக காணப்படும் கூட்டமாக காணப்படும் வேளைகளில் மிக இலகுவாக எரித்து அழித்துவிடலாம்- எனவே கிருமிநாசினிகள் பாவிக்காமல் அதிக செலவின்றி உற்பத்தி செய்யக்கூடிய முருங்கைப் பயிரை ஒவ்வொரு வீடுகளிலும் குறைந்தது ஒரு மரமாவது நட்டு நாமும் நாடும் பயன் பெற உறுதி செய்வோமாக

-தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

பிரமுகர்களுக்கு அமைச்சர் பதவி

# சந்திரிகா உறுதிமொழி; சிறிமாவோ கண்டனம்

(கொழும்பு)

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பல முக்கியஸ்தர்களுக்கு அமைச்சர் பதவி வழங்கப்படும் என சந்திரிகா குமாரணதுங்கா உறுதியளித்துள்ளார்.

இதனைத்தொடர்ந்து சந்திரிகாவின் இந் நடவடிக்கை தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவியுமான சிறிமாவோ பண்டாரநாயக்கா அவருக்கு கண்டித்து கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளதாக அரசசார்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பேர்னாட் சொய்சா, காமினிபொன்சேகா, பேராசிரியர் பீரிஸ், எம்-எஸ். செல்லச்சாமி, லக்மன் சதிர்காமர், மகிந்தராஜபக்ஷ, ஸி- வி குணரத்தினா, நிமால் சிறிபால டிசில்வா, எம்- எச்- எம் அஷ்ரப், திருமதி சிறிமானி அத்துலத்முதலி ஆகியோரிற்கே அமைச்சர் பதவிவழங்க சந்திரிகாவால் உறுதியளிக்கப்பட்டதாக தெரியவருகின்றது.

# வடகொரியா - அமெரிக்கா

[illegible]

# ராஜீவ் கொலை வழக்கு மீண்டும் ஆரம்பம்

(சென்னை)

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை மீண்டும் ஆரம்பமாகிறது. எதிரிகள் தரப்பு வக்கீல்களுக்கு கூடுதல் ஊதியம் அளிக்கப்பட்டதையடுத்தே 41எதிரிகளுக்கு எதிரான இந்த வழக்கின் விசாரணை ஆரம்பமாக இருக்கிறது.

அரச தரப்பு வக்கீல்களுக்குச் சமமான ஊதியம் தமக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்து வெளிநடப்புச் செய்ததையடுத்து ஆரம்பமான வழக்கு விசாரணை ஒருமாத காலமாக நிறுத்தப்பட்டிருந்தது.

இவர்களின் கோரிக்கையை சென்னை உயர்நீதிமன்றம் நிறைவேற்றத் தவறியது. ஆயினும் நாளொன்றுக்கு 360 ரூபா முதல் 750 ரூபா வரை வழங்கும்படி உத்தரவிட்டது.

எதிரிகள் தரப்பில் முன்னணி வக்கீல்களில் ஒருவரான எஸ். துரைசாமி இது பற்றித் தெரிவிக்கையில், அரச தரப்பு வக்கீல்களுக்கு நாளொன்றுக்கு 1500ரூபா கொடுக்கப்படும் அதே வேளை எதிரிகள் தரப்பு வக்கீல்களுக்கு 50ரூபா மட்டுமே கிடைத்தது என்றார்.

நீதிமன்றத் தீர்ப்பை தாம் ஏற்றுக்கொள்ளப்போவதாகவும் வழக்கு விசாரணை ஆகஸ்ட் 16ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் எதிரிகள் தரப்பு வக்கீல்கள் தெரிவித்தனர்.

இந்த வழக்கு கடந்த ஜனவரி மாதம் ஆரம்பமாகியது பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படவில்லை. பத்திரிகையாளர்களுடன் வக்கீல்கள் பேசுவதும் தடுக்கப்பட்டது.

# மீனவர் மீதான தாக்குதல் தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

சென்னையிலுள்ள சிறிலங்கா தூதுவரகத்தின் முன்பாக ஆயிரத்திற்கும் அதிகமான மீனவர்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். அண்மைக் காலமாக சிறிலங்கா ஆயுதப்படையினரால் தமிழக மீனவர்கள் கொல்லப்பட்ட சம்பவங்களுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையிலேயே இவ் ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# யூத இலக்கு தாக்கப்படும் மொசாட் பிரிவு எச்சரிப்பு

ஆர்ஜன்டீனாவில் பெரும் உஷார் நிலை

(பொணர்ஸ்அயர்ஸ்)

கடந்த மாதம் ஆர்ஜன்டீன தலை நகரில் நடந்த யூதர் நலன் நிலையம் மீதான முஸ்லிம் தீவிரவாதிகளின் குண்டுத் தாக்குதல் போன்று மற்று (பார் யூத இலக்கு இன்னும் சிலதினங்களில் தாக்குதலுக்குள்ளாகும் என இஸ்ரேலிய புலனாய்வுப் பிரிவு தமக்கு அறிவுறுத்தியுள்ளதாக ஆர்ஜன்டீன அரசு தெரிவித்துள்ளது.

இதைத் தொடர்ந்து ஆர்ஜன்டீனாவில்பாதுகாப்புபலப்படுத்தப்பட்டுள்ளது. தலைநகரில் இரத்தவங்கிகளும் சத்திர சிகிச்சை கூடங்களும் உஷார் படுத்தப்பட்டுள்ளன.

கடந்த மாத யூத நலன் நிலையம் மீதானகுண்டுத்தாக்குதலில் 100 க்கும் அதிகமானோர் இறந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஈராக் எல்லையில் ஐ.நா. அதிகாரி கொலை

(பக்தாத்)

ஈராக் - குவைத் எல்லையில் இராணுவ நடவடிக்கைகளற்ற சூனியப் பகுதியில் ஐ. நா. அமைதிப்படை கண்காணிப்பாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து ஐ. நா- ஈராக்கிற்கு கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

எனவும் இவரும் ஏனைய சில ஐ நா- அதிகாரிகளும் இப் பகுதியில் ரோந்துவந்தபோது ஆயுதம் தாங்கிய குழு ஒன்றினால் மறைந்திருந்து தாக்கப்பட்டனர் எனவும் கூறப்படுகிறது. எனினும் இச்சம்பவத்திற்கும் தமக்கும் தொடர்பில்லை எனக் கூறியுள்ள ஈராக், இது கடத்தல் காரரின்

சங்களில், அரசிற்கு ஆதரவான ஆயுதக்குழுக்கள் இருப்பதும் தெரிந்தவிடயமே. இந்த வகையில் இங்குள்ள மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கக்கூடிய நிலையில் இல்லை என்பதும் வெளிப்படை. இங்கு நடைபெறவுள்ள தேர்தலை ஒரு மனித உரிமை மீறல் என இலங்கை மனித உரிமைகள் குழுத் தலைவரே குற்றம் சாட்டியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், வடக்கில் தேர்தல் என்பது அரசாங்கம் தனக்குச்சார்பான ஒரு தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு உதவுமே ஒழிய ஒரு போதும் சுதந்திரத் தேர்தலாக இருக்கமாட்டாது என்பது எதிர்பார்க்கக்கூடியதே. இதற்கு ஏற்றால் போலவே அரசசார்பு ஆயுதக்குழு பேட்புமனு தாக்கல் செய்ததோடு, ஏனைய குழுவினர் அப்பகுதிக்குள் பிரவேசிப்பதற்கு அச்சுறுத்தலும் விடுத்து வந்துள்ளது.

ஆனால், இவை எதிர்பார்க்கப்பட்டும், பொதுஜன ஐக்கிய முன்னணியால் ஆரம்பத்தில் இது குறித்து அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. யாழ். மாவட்ட தேர்தலுக்கு எதிராக எழுந்த குரலுக்கு பெரிஎளவில் ஆதரவோ ஒத்துழைப்போ கொடுத்ததாகவும் தெரியவில்லை

ஆனால், தற்பொழுது யாழ். மாவட்டத் தேர்தலில் மோசடி இடம்பெறவுள்ளதாக எச்சரிக்கை செய்ய புறப்பட்டமையானது பொதுஜன ஐக்கிய முன்னணியினர் அரசியற் கணிப்பீட்டில் தப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக எண்ணத்தொடங்குகின்றனரோ என சிந்திக்கவைக்கின்றது.

அதாவது தென்னிலங்கைத் தேர்தல் முடிவுகள் பெரும்வெற்றியைப்பெற்றுத்தராத நிலையில், வடக்குகிழக்கில் நடைபெறும்தேர்தலில் அரசசார்புகுழுக்கள் பெறும் வெற்றி தமக்குப் பாதகமாக அமைந்துவிடும் என அவர்கள் அஞ்சத்தொடங்கியுள்ளதாகவே உணரவைக்கிறது. அல்லது போனால், காலம் கடந்து சந்திரிகா குமாரணதுங்கா இவ்வாறான எச்சரிக்கையை விடுக்க வேண்டியதன் நோக்கம் என்ன?

ஆனால், சந்திரிகா குமாரணதுங்கா எச்சரித்தென்ன, எச்சரிக்காது விட்டென்ன? யாழ். மாவட்டத்தில் நடைபெறப்போகும் தேர்தல் மோசடித்தனமானது என்பதும் அதில் ஐ.தே.க. லாபம் ஈட்டப்போகிறது என்பதும் வெளிப்படை. சில சமயம், ஐ.தே.க. தேர்தலில் தோல்வியுற்றாலும் இத்தேர்தல் தொகுதிகளில் பெயரில் தெரிவு பெறும் உறுப்பினர்களின் ஒத்துழைப்பு அவர்களுக்கே கிடைக்கும் வாய்ப்பு உண்டு.

# புதிய இணக்கம் கண்டன

## அணு ஆயுத பதற்றம் நீங்கியது

அணு ஆயுதம் தொடர்பாக கொரிய தீபகற்பத்தில் நிலவி வந்த பதற்றத்தை தணிக்க அமெரிக்காவும் -வடகொரியாவும் இணக்கம் கண்டுள்ளன. இருநாடுகளும் தம்மிடையே இராஜீய நடவடிக்கைகளை மீளவும் ஆரம்பிக்க விருப்பம் தெரிவித்துள்ளன.

புதிய இணக்கத்தின்படி வடகொரிய அணு தொழில் நுட்ப வளர்ச்சிக்கு அமெரிக்கா உதவி வழங்கும். கிரபைட்டினால் இயங்கும் வடகொரிய அணு உலைகளுக்குப் பதிலாக கதிர்வீச்சு குறைந்த புதியதொழில் நுட்பத்திறன் வாய்ந்த அணு உலைகள் இரண்டை வழங்க அமெரிக்கா இணங்கியுள்ளது. முதற்கட்ட இணக்கப்பாட்டின் நல்லெண்ண வெளிப்பாடாக இரு நாடுகளிடையிலான வர்த்தகம் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது. வடகொரியாவிற்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான இந்த இணக்கப்பாடு குறித்து தென்கொரியாவில் வரவேற்பு காணப்படுகிறது.

வடகொரியாவும் அமெரிக்காவும் தமது பேச்சுகளை ஜெனீவாவில் ஜூலை 8 ஆம் திகதி ஆரம்பித்திருந்தன. மீண்டும் அடுத்தகட்ட பேச்சுகள் அடுத்தமாத பிற்பகுதியில் ஆரம்பிக்கும்.

## தமிழ்நாட்டில் அகதிகள்மீது கெடுபிடி மனித உரிமைகள் குழு விசாரணை

தமிழ் நாட்டில் தங்கி உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் நடமாட்டத்தினை கட்டுப்படுத்தும் வகையில் தமிழக அரசு கடந்த ஆண்டு மே மாதம் பிறப்பித்த ஆணை மனித உரிமைகளுக்கு எவ்வகையில் முரணானது என்பதைக் கண்டறிய புதுடில்லியில் உள்ள தேசிய மனித உரிமைகள் குழு விசாரணக்கு உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக அது தமிழக அரசின் தலைமைச் செயலருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்படி அரசின் ஆணை அகதிகளின் மனித உரிமைகளை எவ்வாறு மீறுகிறது என்பதை விசாரித்து நான்கு வாரங்களுள் பதில் அனுப்புமாறு கேட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அகதிகள் நடமாட்டத்தினை கட்டுப்படுத்தும் வகையிலும் தொண்டு நிறுவனங்கள் அகதி முகாம்களில் பணிபுரிவதை தடுக்கும் வகையிலும் தமிழக அரசு கடந்த ஆண்டு மே மாதம் 27-ம் திகதி ஆணை பிறப்பித்தது.

இது குறித்து இந்திய இலங்கை நட்புறவுக் கழகம் தமிழக அரசின்மீது குற்றம் சாட்டி தேசிய மனித உரிமைக்குழுவுக்கு மனுச்செய்தது.

அகதி மக்களின் துயர்களை தமிழக அரசு ஆணை இரட்டிப்பாக்குகிறது எனவும் தங்கள் நாட்டில் நடைபெறுகின்ற இனப்படுகொலையிலிருந்து தப்பி உயிருக்கும் உடைமைக்கும் எந்தவித உத்தரவாதமும் இல்லாத நிலையில், தமிழ்நாடே தஞ்சம் என்று ஓடிவந்த அப்பாவி இலங்கைத் தமிழ் அகதிகளின் மனிதவுரிமைகளை அந்த ஆணை பறிக்கிறதுஎனவும் அம்மனுவில்புகார்செய்யப்பட்டிருந்தது.

## பிரெஞ்படை வெளியேற்றம் அகதிகள் அஞ்சி ஓட்டம்

(கிகாலி)

றுவாண்டாவிலிருந்து பிரெஞ் படைகள் வெளியேற முயற்சி செய்வதையடுத்து அவர்களது பாதுகாப்பு வலயத்தினுள் தஞ்சமடைந்திருந்த றுவாண்டா பெரும்பான்மை இன ஹூட்டு அகதிகள் அச்சம் காரணமாக சயர் நாட்டிற்குள் தப்பி ஓடுகின்றனர். பிரெஞ் படைகள் விலகியதும் தற்போது றுவாண்டாவில் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள சிறுபான்மை டுட்சி இனத்தவரால் தாம் தாக்கப்படலாம் என அஞ்சியே இவர்கள் வெளியேறி வருகின்றனர்.

இவர்களை அமைதியாக இருக்குமாறு ஐ. நா. படையினரும் புதிய றுவாண்டா அரசும் மீண்டும் மீண்டும் கோரிய போதிலும் பலன் ஏதும் ஏற்படவில்லை.

## மையமாக தென் ஆபிரிக்கா

சர்வதேச போதைப்பொருள் கடத்தல்காரரின் முக்கிய மையமாக தென்னாபிரிக்கா மாறிவருவதாக அந்நாட்டு பொலிசார் தெரிவித்தனர். போதைப்பொருள்களை பல நாடுகளுக்கு பிரித்தனுப்பும் மையமாக தென்னாபிரிக்கா விளங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நடவடிக்கைக்கு எதிராக செயற்பட்ட அரசியல்வாதி ஒருவருக்கு இக்கடத்தல்காரரினால் அண்மையில் கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஈராக்கிற்கு கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்டவர் பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்தவர் டில்லை எனக் கூறியுள்ள ஈராக், இது கடத்தல் காரரின் வேலை எனத் தெரிவித்துள்ளது.

## அமெ உளவுப்பிரிவுக்கட்டடம் இரகசியமாக அமைப்பு

வேர்ஜீனியாவில் 31 கோடி அமெரிக்க டொலர் செலவில் அமைக்கப்பட்டு வரும் இரகசிய உளவுப் பிரிவிற்கான கட்டடத்தொகுதி பற்றி முழு அளவிலான விசாரணையொன்றை உடனடியாக நடத்துமாறு அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன் உத்தரவிட்டுள்ளார்.

இந்நிர்மாணப்பணியைஏன் இரகசியமாக அமைக்கப்படுகிறது என்பதை விசாரணை செய்யுமாறு மத்திய புலனாய்வு பணிப்பாளர் ஜேம்ஸ் வூல்சே, பதில் பாதுகாப்புச் செயலர் ஜோன் டுயெட்ச் ஆகியோரை கிளின்டன் பணித்துள்ளார். இக்கட்டடம் பற்றிய தகவல்கள் மறைக்கப்பட்டு விட்டதாகச் செனட்டின் புலனாய்வுக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதேசமயம் இக்கட்டட நிர்மாணம் தொடர்பாக விசாரணை நடத்துமாறு தான் அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளதாகப் பாதுகாப்புச் செயலர் வில்லியம் பெரி கூறியுள்ளார். காங்கிரசிற்கு அறிவிக்காமல் அமெரிக்க உளவு ஸ்தாபனம் ஒன்று 31 கோடி டாலர் பெறுமதியுடைய பிரமாண்டமான தலைமையகத்தை வாஷிங்டனுக்கு அருகில் அமைத்து வருவதாக செனட்டர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தேசிய உளவுக்காரியாலயம், டல்லாஸ் சர்வதேச விமான நிலையத்துக்கருகில் 4 பெரிய கட்டடங்களை அமைத்து வருவதாய் செனட் உளவு கமிட்டி அங்கத்தினர்கள் கூறினர்.

யுத்தபிற்கால அமெரிக்க உளவு ஏஜென்ஸிகளில் சகல உளவுச் செய்மதிகளுக்கும் பொறுப்பேற்க தேசிய உளவுக்காரியாலயம் அமைக்கப்பட்டது. இக்காரியாலயம் இரகசியமாகவே இயங்கிவந்தது. தலைமையகம் ஒன்றை அமைக்க அது திட்டமிட்டிருந்தது தங்களுக்குத் தெரியும் என்றும் ஆனால் இவ்வளவு பெரிய கட்டடம் இத்தகைய பெரும் செலவில் அமைவது தமக்கு தெரியாது என செனட்டர்கள் கூறினர்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994. 08. 15 திங்கள் இரவு

08. 01 - தளிர்கள்
08. 20 - செய்திச்சரம்
08. 30 - செய்திகள்
08. 40 - தரிசனம்-தமிழீழ விடுதலைப்புலிகள் மருத்துவப் பிரிவின் நடமாடும் மருத்துவ சேவைப்பொறுப்பாளர் செல்வி. தேவா அவர்களுடனான செவ்வி

### 1994. 08 16 செவ்வாய் காலை

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - இன்றைய தாரகை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - தாயகப்பாடல்கள்.

ஈழநாதம்

15-08 94

# பூநகரிப் பகுதி மோதலில் வீரச்சாவடைந்த வேங்கைகள்




மேஜர் பீலிஸ்
(அதிதரன்)



மேஜர் நவம்
(அல்பேட்)



மேஜர் இளந்தேவன்
(அலன்)



கப்டன் முருகன்
(கமல்)



கப்டன் இலக்குவன்
(ஜோதிராஜ்)



கப்டன் சுகுமாறன்
[சுகு]



11-8-1994 அன்று பூநகரிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதலொன்று இடம்பெற்றது. இம்மோதலில் எட்டுப் போராளிகள் வீரச்சாவடைந்தனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.



## இறுதி வீரவணக்கமும் நடுகல் நாட்டலும்

முல்லைமாவட்டத்தில் கடந்தமே 7-ம்திகதிசிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட திடீர் மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கப்டன் தேவன் / இளங்குமணன் (பாலசிங்கம் ஜெயபாலன், உரும்பராய் தெற்கு) 2ஆம் லெப். செல்வக்குமரன்/ பல்லவன் (செல்லத்துரை நந்தகுமாரன், நீர்வேலி) ஆகியோரதும்-

மன்னார் பட்டினத்தில் கடந்த 11ஆம் திகதியன்று சிறிலங்கா பொலிஸ் நிலையமொன்றில் புலிகளால் நடாத்தப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கப்டன் குமரன் (பரமேஸ்வரன் பிரதீபன், நவாலி வடக்கு மானிப்பாய்) ஆகியவரதும்-

வித்துடல்கள் கிடைக்கப் பெறாதமையினால் அவர்களது திருவுருவப் படங்கள் அவரவர்களின் இல்லங்களிலிருந்து இன்று பி. ப. 3.00 மணியளவில் அணிவகுப்பு மரியாதைகளுடன் உரும்பராய் ஞானவைரவர் சனசமூக நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு மக்களின்இறுதி வீரவணக்கத்திற்காக வைக்கப்பட்டு இறுதி வீரவணக்கக் கூட்டமும் நிறைவுற மீண்டும் அணிவகுப்பு மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் மூவரினதும் நினைவுக்கற்கள் நாட்டப்படும்.

## வடமராட்சி கடற்பரப்பில் கடற்படை படகு நடமாட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினருக்கு சொந்தமான தாக்குதல் படகு ஒன்று நேற்று அதிகாலை காணப்பட்டதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

குடத்தனை, மணற்காடு கடற்பகுதியில் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் இக்கப்பலை கண்டதும் அச்சத்தினால் திரும்பியுள்ளனர்.

வடமராட்சி கடற்பகுதியில் இரவு இக்கப்பல் ரோந்து சென்றதாகவும் அதிகாலை வடமராட்சி கிழக்கில் நங்கூரமிட்டிருந்ததாகவும் தெரிவித்தனர்.

அதே சமயம் புக்காரா விமானம் ஒன்று நேற்று காலை 6-45 மணியளவில் பொலிகண்டி பகுதியை வட்டமிட்டது. (யோ)

### புதிய

பெறுவதைப் பாதிக்கும் என்பதை தெட்டத் தெளிவாக கூறிக்கொள்ள விரும்புகிறேன்

தற்போதைய முக்கியத்துவம் வாய்ந்த நிலையில், இத்தகைய மாற்றங்கள் செய்யப்படுவதை பொதுஜன ஐக்கிய முன்னணி கடுமையாக ஆட்சேபிக்கின்றது. புதிய அமைச்சரவை பதவியேற்கும் வரை இராணுவத்திலோ, பாதுகாப்பு அமைச்சிலோ எத்தகைய மாற்றமும் செய்யப்பட்டு தற்போதைய நிலை சீர்குலைக்கப்படக் கூடாது என்பதையே பொதுஜன ஐக்கிய முன்னணியினதும் எனதும் அபிப்பிராயமாகும் எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே சமயம் தாய்லாந்தின்

### வடக்கு-கிழக்கு

டுக்க சட்ட திருத்தங்கள் கொண்டுவர வேண்டும், என்றும் இதற்கான வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி வெளியிட வேண்டும் என்றும் பேராசிரியர் பீரிஸ் கூறுகிறார்.

இதுவரைஅதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை எதிர்த்து வந்த பேராசிரியர் சட்ட திருத்தத்தைக்கொண்டு வருவதன் மூலம் மக்கள் அதிகாரம் பறிக்கப்பட வேண்டும் என்கிறார் என சொக்ஸி மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

### பலாலி

அடுத்து அத்தளத்தின் பாதுகாப்பு குறித்து சிறிலங்காவின் பல வட்டாரங்களிலும் பதற்றம் நிலவுவதாகவும் இதனால் இந் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது-

இதேவேளை வவுனியாவிலிருந்து பத்துக்கு மேற்பட்ட கவசவாகனங்கள் ரயில் மூலம் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது-

## ராஜாங்க அமைச்சர் விபத்தில் காயம்

ராஜாங்க அமைச்சர் ஏ. எச். எம். அஸ்வரும் புத்தளம் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அசோக வடிகமங்காவவும் பிரயாணம் செய்த ஜீப் விபத்துக்குள்ளானதால் இருவரும் காயமடைந்தனர். காயமடைந்த இருவரும் உடனடியாக அம்புலன்ஸ் மூலம் கொழும்பிற்கு அனுப்பப்பட்டனர்.

கடந்த புதன்கிழமை மாலை நான்கு மணியளவில் புத்தளம் கல்பிட்டி வீதியில் உள்ள தலுவ என்ற இடத்தில் இந்த விபத்து நிகழ்ந்தது. இவர்கள் பிரயாணம் செய்த ஜீப் பாதையை விட்டு விலகி சிறிய மதகு ஒன்றில் விழுந்து விபத்துக்குள்ளானதாகவும் இதனால் ஜீப் சேதமடைந்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

### மலையக

அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் மலையக இளைஞர்கள் பலர் தடுத்து வைக்கப்பட்ட போதும், சித்திரவதை செய்யப்பட்டு துன்புறுத்தப்பட்ட போதும், குமார் பொன்னம்பலம் தலைமையிலான சட்டத்தரணிகள் பலர் எவ்விதமான எதிர்பார்ப்புமின்றி செய்த சேவைகளை விடுதலையான இளைஞர்கள் எவரும் மறக்க மாட்டார்கள் தமிழர்களின் உள்ளக் குமுறல்களை உணர்வுகளை அச்சமின்றி வெளியிட்டு வரும் குமார் பொன்னம்பலம் தலைமையிலான குழுவினரை வெற்றி பெற வைக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுவேண்டுகோள் விடுத்துள்ளார்.

### ஆங்கில

ரிகை கருத்து தெரிவிக்கையில் மேலதிக ஆசனங்களை பொதுஜன ஐக்கியமுன்னணிபெற்றாலும் ஆட்சியை ஐக்கிய தேசியக் கட்சி அமைக்கும் என தெரிவித்துள்ளது. ''சண்டே ஒப்சேவர்'' சிங்கப்பூர் நிறுவனம் ஒன்று எடுத்த கருத்துக் கணிப்பீட்டின் படி மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைக்கும் என தெரிவிக்கிறது,

இதேவேளை சண்டே லீடர், சண்டே ரைம்ஸ் ஆகிய இரு பத்திரிகைகளும்ஆசிரியர் தலையங்கத்தில்எதிர்வரும்பொதுத் தேர்தலில் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறும் என நம்பிக்கை தெரிவித்து வாழ்த்தும் தெரிவித்துள்ளன.

### என்னைக்

தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக தனக்கு கிடைத்துள்ள தகவல் முற்றிலும் உண்மையானது என்றார்.

இவ் அச்சுறுத்தலால் இறுதிநேர தேர்தல் பிரசாரங்கள் பல ஒத்திவைக்கப்பட்டன நாளை நடைபெறவுள்ள தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வெற்றி குறித்து எனக்கு சந்தேகம் இல்லை, ஆனால் ஐக்கிய தேசியக்கட்சியினர் தமது தோல்வியை ஒப்புக் கொண்டு ஆட்சியை எம்மிடம் ஒப்ப

## தேர் உற்சவம்

(வேலணை)

வேலணை பெருங்குளம் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த ரதோற்சவ தினமான எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருநெல்வேலியில் உள்ள அம்மன் ஆலயத்தில் விசேட அபிஷேகங்களும் அன்றையதினம் பகல் அன்னதானமும், இரவு தீ மிதித்தல் வைபவமும் இடம்பெற விருக்கின்றன. (14)

### நாளை

6-30 மணியளவில் பெரும்பாலான தேர்தல் முடிவுகள் வெளிவரத் தொடங்கும் எனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். அத்துடன் விருப்பத்தேர்வு வாக்குகள் எண்ணப்பட்டு 17ஆம் திகதி மாலை முடிவுகள் வெளிவரும் என அவர் மேலும் கூறினார்.

### பூநகரி

- மேஜர் இளந்தேவன்/ அலன் (செல்லையா ஜெயசீலன் உப்பிலான் குளம் வவுனியா)
- கப்டன் முருகன்/கமல் (இராமச்சந்திரன் ஸ்ரீராஜ் பொலிகண்டி, வல்வெட்டித் துறை)
- கப்டன் இலக்குவன்/ ஜோதிராஜ் (சண்முகம் மருதைக்குமார் - காக்கையன் குளம் இரணை இலுப்பைக் குளம் வவுனியா)
- கப்டன் சுகுமாறன் /சுகு (சுப்பிரமணியம் சந்திரவிலால் -கண்டி த முகவரி - மடுத் தேவாலயம் மன்னார்)
- லெப்டினன்ட் ஈழம் (சோமசுந்தரம் சிவகுமார் உப்புக்கேணி வீதி, பெரியமாவடி சாவகச்சேரி)
- 2-ம்லெப்டினன்ட் பிரசாந்தன்/வாணன் (

லெப். ஈழம்

2ம் லெப். பிரசாந்தன் [வாணன்]

# தோல்வி அடையவுள்ள சந்திரிகாவை நாம் ஏன் கொல்ல வேண்டும்?

## - பிரதமர் ரணில் கேள்வி

(கொழும்பு)

தேர்தலில் தோல்வியைத் தழுவவிருக்கும்சந்திரிகா குமாரணதுங்காவைக் கொல்ல ஐக்கிய தேசியக் கட்சி ஏன் கொலைச் சதித்திட்டம் ஒன்றை வகுக்க வேண்டும் என பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்றுமுன்தினம் பிரான்ஸ் வானொலிக்கு அளித்த பேட்டியில் இக்கேள்வியை அவர் எழுப்பினார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்; வாக்காளரின் அனுதாபத்தை தனக்கும் கட்சிக்கும் பெற்றுக்கொள்ளும் முகமாக இப்புரளியை சந்திரிகா கிளப்பி விட்டுள்ளார் எனவும் மக்கள் இதனை நம்பத்தயாராக இல்லை எனவும் கூறினார்.

மீண்டும் தனது கட்சியே ஆட்சியை அமைக்கும் என்றும் இதில் எந்த சந்தேகமும் இல்லைஎன்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

# இந்திய இராணுவம் வெளியேற போ. ஐ. மு: நடவடிக்கையே காரணம்

## - காமினி திஸநாயக்கா

(கொழும்பு)

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்ததன் மூலம் நாட்டில் வன்முறைகளும் குழப்பங்களும் உருவாகும் நிலையைஏற்படுத்தியவர்கள்பொது ஜன ஐக்கிய முன்னணியே என அமைச்சர் காமினி திஸநாயக்கா ஹசலக்க நகரில் நடைபெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசிய போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில், இந்திய அமைதிப்படை வெளியேற, சிங்கள இராணுவ இளைஞர்கள் பெருமளவில் போரில் மடியும் நிலையும் இதனாலேயே ஏற்பட்டது; இன்று போரிற்கு வீணே பெருமளவு பணம் செலவாகின்றது.

இந்தத் தடவை மட்டுமன்றி

### அதிகாரிகள்

னடிப்படையில் விவசாயத் திணைக்களமும் தனது ஊழியர்களை நிரந்தரமாக்கியுள்ளது. விவசாயத் திணைக்களமும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களமும் ஒரே அமைச்சின்கீழ் உள்ளன. இருந்தும் கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்கள அதிகாரிகளின் அசிரத்தையே இவ் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைக்காமைக்கு காரணம் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எப்போதும் மலையக மக்கள் ஐ. தே. க வை ஆதரித்து வந்துள்ளனர். இத் தேர்தலிலும் அவர்களதுஆதரவுடன்பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு ஐ. தே. க தகுந்த பாடம் கற்பிக்கும் என்றார்.

### வீரச்சாவு

திருமாறன் / சிறி (குவேந்திரராஜா இராகுலன் - வளலாய் அச்சுவேலி. தற்போதைய முகவரி - முருகன் கோவிலடி நீர்வேலி) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

இதே சமயம் தாய்லாந்தின் தூதுவராய் உள்ள முன்னாள் இராணுவத் தளபதி லெப், ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா கொழும்பு திரும்பியமையும், அவர் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன்வனசிங்காவைச் சந்தித்துப் பேசியமையும் குறிப்பிடத்தக்கது.

### ராணுவ

காகியது. தாக்குதல் ஆரம்பித்ததை தொடர்ந்து கட்டுமுறிவு பகுதியில் ஒருவரும், கதிரவெளிப் பகுதியில் ஒருவரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்துள்ளனர். மேலும் சிலர் காயமடைந்துள்ளனர்; கட்டுமுறிவு பகுதியில் இருந்து பல குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இப்பகுதிக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது,

தாக்குதல் நடத்தப்பட்ட வாகரைப்பகுதி காடும் வயலும் சூழ்ந்தது என்பதும் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்புறம் என்பதும் குறிப்பிடத்தக்கது, மேலும் இடம் பெயர்ந்துள்ள மக்களில் பலரும் வாழைச்சேனைப் பகுதிக்கு சென்றுள்ளனர்,

இப்பகுதியிலுள்ள படையினர் காட்டுப்புறங்களை நோக்கி கடுமையான எறிகணைத் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும். இராணுவ முகாமிற்கு அடிக்கடி உலங்குவானூர்தி வந்து சென்றதாகவும், புலிகளைத் தேடுகின்றோம் என்ற போர்வையில் காடுகளுக்குள் ஊடுருவி இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இத்தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து இப்பகுதியில் வாக்காளர் அட்டை விநியோகிக்கும் வேலை பெருமளவில் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

பிடத்தக்கது-

### ஐ. தே. கவின்

இல்லாவிடின் பெரிய அளவில் அரசியல் யுத்தம் ஒன்று ஏற்படும் என்றும் இதனை தடுப்பது மிகவும் கடினமான காரியமாக அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்

### இராணுவ

புன்னையடி இராணுவ முகாம் காவலரணில் காவல் கடமையில் இருந்த சிப்பாய் ஒருவர் நள்ளிரவு 12 மணியளவில் தனது துப்பாக்கியைச் சரிபார்த்துக்கொண்ட வேளையிலே தவறுதலான வேட்டு தீர்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது

முகாமுக்கு அண்மையிலுள்ள வீட்டுத் திண்ணையிலே உறங்கிக்கொண்டிருந்த வடிவேல் சிறிதரன் என்ற சிறுவனின் வயிற்றை துப்பாக்கிக் குண்டு துளைத்துச் சென்றது

### ஐ. தே. க.

ஆதரித்துள்ளனர் இவர்களில் பலர் தமிழ், முஸ்லிம் இனங்களைச் சேர்ந்தோராவர் இன்று கிழக்கில் ஜனநாயகம் நிலைநிறுத்தப்பட்டுள்ளது வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலும் தேர்தல் நடத்தப்படும் இப் பிரதேசங்களில் ஐ தே. கவே வெற்றி பெறும் பொதுஜன ஐக்கிய முன்னணியினர் ஆட்சியைப் பிடிக்க பார்க்கின்றனர் நாம் ஆரம்பத்திலிருந்தே ஒன்றுபட்ட இலங்கைக்காக குரல் எழுப்பி வந்துள்ளோம் ஐ. தே. க பலமான ஓர் அரசை நிறுவ 150 உறுப்பினர்கள் தேவை இந்த 150 பேரையும் தெரிவுசெய்து தருவீர்களானால் இரண்டு வாரங்களில் புலிகளை அடிபணியச் செய்வோம்

ஆட்சியை எம்மிடம் ஒப்படைக்க முன்வருவார்களா? என்பது குறித்தே எனக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது என சந்திரிகா குமாரணதுங்க கூறினார்-

நந்தன்/வாணன் (தில்லையம்பலம் ஸ்ரீகாந் - மட்டக்களப்பு)

ஆகிய எட்டுப் போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.


## கண்ணீர் அஞ்சலி

### திரு. ஆறுமுகம் லோகேஸ்வரன்

14-8-1994 அன்று அகால மரணமடைந்த எமது சகபாடி திரு. லோ. கிரேதாகரனின் அன்புத் தந்தை திரு. ஆறுமுகம் லோகேஸ்வரன் தோப்பு அச்சுவேலி (முன்னாள் ஆசிரியர்) அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவிக்கின்றோம்.

ஆசிரிய, மாணவ, நண்பர்கள்
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

(9103)

## மரண அறிவித்தல்

### திருமதி குமாரசாமி சரஸ்வதிப்பிள்ளை

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட குமாரசாமி சரஸ்வதிப்பிள்ளை 14-8-94 நேற்று காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும், வீரசிங்கம், தம்பிஐயா, சிதம்பரப்பிள்ளை (சுவிஸ்), கமலாம்பிகை, கனகசபை, அன்னலிங்கம் (சுவிஸ்), விவேகானந்தராசா (சுவிஸ்), ஆகியோரின் தாயாரும், பூபதி, கலாவதி, யோகம்மா, ஜெயராசா (ஜேர்மனி), செல்வராணி, அஜந்தா, சத்தியா ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று திங்கள் (15-8-94) கொடிகாமம் இல்லத்தில் நடைபெற்று கொடிகாமம் கட்டப்பறித்தான் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தைவீதி,
கொடிகாமம்.

தகவல்:
மகள்

(சி/10114)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.